VASANTHAM Tamil Monthly 1 - 5 مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية



சாதிக் கொடுமைகள் நீங்க..!

வசந்தம்

மாத இதழ்

AR-RABAE

பிப்ரவரி 2008 வாசிக்க மட்டுமல்ல... வாழ்க்கைக்கும்! February 2008



குன்றிலிட்ட விளக்காய் குவைத்!

வளர்ச்சிப் பாதையில்..!

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية الدعوة الخيرية

وَلاَ تَقْرَبُواْ الزِّنَى إِنَّهُ كَانَ فَاحِشَةً وَسَاء سَبِيلاً



விபச்சாரத்தின் அருகில்கூட நெருங்காதீர்கள்! திண்ணமாக, அது மானங்கெட்ட செயலாகவும், மிகத் தீய வழியாகவும் இருக்கிறது!
-திருக் குர்ஆன் 17:32

وَمِنْ آيَاتِهِ أَنْ خَلَقَ لَكُم مِّنْ أَنفُسِكُمْ أَزْوَاجًا لِّتَسْكُنُوا إِلَيْهَا وَجَعَلَ بَيْنَكُم مَّوَدَّةً وَرَحْمَةً إِنَّ فِي ذَلِكَ لآيَاتٍ لِّقَوْمٍ يَتَفَكَّرُونَ



மேலும், அவனுடைய சான்றுகளில் இதுவும் ஒன்றாகும். அவன் உங்களுக்காக உங்கள் இனத்திலிருந்தே மனைவியரைப் படைத்தான்; நீங்கள் அவர்களிடம் அமைதி பெற வேண்டும் என்பதற்காக! மேலும், உங்களிடையே அன்பையும், கருணையையும் தோற்றுவித்தான். திண்ணமாக சிந்திக்கும் மக்களுக்கு இதில் நிறையச் சான்றுகள் உள்ளன.
-திருக் குர்ஆன் 30:21

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

Extn: 208 2444117

رحمة للعالمين...
www.ipc-kw.com

வசந்தம்

வாசிக்க மட்டுமல்ல.. வாழ்க்கைக்கும்!



VASANTHAM - Ar-Rabae
Tamil Monthly
February 2008
பிப்ரவரி 2008
மலர் I இதழ் 6

CHIEF PATRON
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari

EDITOR
ஆசிரியர்
M.A. Abdul Musavir

EDITORIAL BOARD
N.M.M. Hussain Islahi
Ameer Hasan Nainar Madani
Faizal Muhammad Najahi
Muhammad Jabir Deeni
Moulavia Farzana Rafeeq

DESIGN
வண்ண உருவரைபடம்
Nader Bellal
IT Section-IPC

PUBLISH
வெளியீடு
ISLAM PRESENTATION COMMITTEE
KUWAIT

CONTACTS
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT

DIAL
2444116, 2444117 Extn: 208

FAX
2400057
Attn: IPC—VASANTHAM

e-MAIL
amusavir@gmail.com

WEBSITE
www.ipc-kw.com

இந்த இதழில்...!



8 மார்க்கம்
உங்களைக் கண்ணியப் படுத்திக் கொள்ளுங்கள்
என்.எம்.எம். ஹுஸைன்



12 பதிவுகள்
புனித ஹஜ் விழா!
IPC

நிகழ்வுகள்





15 மகளிர் சிந்தனை
இறையச்சமா? இனிய கணவனா?
ஸகீனா மணாளன்

4 முகப்புக் கட்டுரை
குன்றிலிட்ட விளக்காய் குவைத் வளர்ச்சிப் பாதையில்..!
மு.அ.அப்துல் முஸவ்விர்

2 வாசகர் வசந்தம்
3 ஆசிரியரிடமிருந்து..!
10 திருக் குர்ஆன் பக்கம்
11 நபிமொழி பக்கம்
14 கவிதை
16 ஆய்வு
17 விருந்தினர் பக்கம்
18 மார்க்கம்
19 ஆளுமை
20 கடைசி ப்பக்கம்

رسائل القراء > عيد الحب مظهر الفساد الخلقي > الكويت إلى طريق النهوض > احترم نفسك
الساعة موعدها لقريب > القدوة الحسنة > أنشطة اللجنة > الطريق إلى السعادة
وجود الباري جل وعلا > مكانة المرأة في الإسلام > الدين الوحيد الذي حارب الطبقية >
الإسلام دين السماحة > الرسول القائد > فاذكروني أذكركم

போதனைகள் அரிய முத்துக்கள்!

நான் என்றுமே வசந்தம் இதழை கைநழுவ விடுவதில்லை - முதல் காரணம் அது சொல்லும் செய்திகள். அடுத்து, படிக்க ஆர்வமூட்டும் வகையிலான அதன் வடிவமைப்பு!

கடைசிப்பக்க போதனைகள் அரிய நல்முத்துக்கள்!

காலத்துக்கு அவசியமானதாக அமைகின்றது அதன் முகப்புக் கட்டுரை!

இப்போது நான் வசந்தத்தின் நிரந்தர வாசகன்!

பணி தொடரட்டும்!

வின்சென்ட் ஜார்ஜி
பட்டாபிராம்-சென்னை
ஹவல்லி , குவைத்

புலம்பெயர்வாசிகளின் நிரந்தரத் தீர்வுக்கு வழி இஸ்லாமிய நடைமுறை அம்சங்களே! அதை விடுத்து மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளும் கானல் நீரே!

இதுவரை பெரும்பாலும் யாரும் தொடாத விஷயத்தை தனக்கேயுரிய பாணியில் சகோதரர் மு.அ.அப்துல் முஸவ்விர் விளக்கியது அருமை!

சகோதரர் பைஸல் முஹம்மத் தந்த புத்தாண்டின் உண்மை விளக்கம் காலத்துக்கு அவசியமான ஒன்று!

முஹம்மத் ரபீக்
கள்ளக்குறிச்சி
ஸுப்ஹான் - குவைத்



எல்லோரும் ஓர் குலம் - தலைப்பை கண்டு வழக்கமான விஷயமாகத்தான் இருக்கும் என்று நினைத்தேன். உள்ளே சென்று படித்த பிறகுதான் தெரிந்தது, புலம்பெயர்வாசிகளின் தீர்வுக்கான வழிமுறையை ஆசிரியர் எவ்வளவு அருமையாக எடுத்துக் கூறியிருக்கின்றார் என்று!

சத்தியத்தில் நிலைத்திரு சகோதரா அனைவருக்கும் நல்ல படிப்பினை!

முஹம்மத்
இராமநாதபுரம்
பர்வானியா - குவைத்

சகோதரனுக்கு சகோதரியின் அறிவுரை எம்மைப் போன்ற வெளிநாட்டுவாழ் மக்களுக்கு தேவையான ஒன்று!

அண்ணலார் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் குறித்த விளக்கம் பல விஷயங்களை சொன்னது.

திருக்குர்ஆன் கூறும் முன்மாதிரிப் பெண்கள் குறித்த வரலாறு தொடரட்டும்!

முஹம்மத் ஸுலைமான்
இராமநாதபுரம்
கேதான்- குவைத்



வசந்தம் - டிஸம்பர் இதழ் கண்டேன். அரபுநாட்டில் ஒரு நல்ல பத்திரிகை படித்த திருப்தி மனதுக்கு!

மு.அ.அப்துல் முஸவ்விர் அவர்களின் 'ஹஜ் ' குறித்த தலையங்கம், 'கஅபா பற்றிய ஐயமும் தெளிவும் ' அருமையிலும் அருமை!

ஷகீரா பஷீர் அவர்களின் 'பொறாமைத் தீ' கட்டுரை நல்ல பாடம்!

வசந்தம் வளர வாழ்த்துகின்றேன்!

அ. நவ்ஷாத் அன்வர்
இராமநாதபுரம்
அல் தாய்யா - குவைத்

கஅபா -குறித்த முஸ்லிம் அல்லாதாரின் பல்வேறு தரப்பட்ட ஐயங்களுக்கு நல்ல விளக்கமாக அமைந்தது, முகப்புக் கட்டுரை!

இறைவனின் இனிய நண்பர் - கட்டுரை பல விஷயங்களைச் சொன்னது.

கடைசிப்பக்க சிந்தனை வைர கிரீடம்!

தில்ஷாத் பேகம்
பாண்டிச்சேரி
பஹாஹீல்- குவைத்

முகப்புக்கட்டுரை, வாழ்க்கை, மகளிர் சிந்தனை அனைத்தும் அருமை!

ஸகீனா மணாளனின் முஸ்லிம் பெண்: படித்தரங்கள் தொடர் இஸ்லாத்தில் பெண்கள் பற்றிய தவறான கருத்துக்களை நீக்கும்!

குவைத் நிகழ்வுகள், தாய்நாட்டு செய்திகள் போன்ற சிலவற்றை இணைத்தால் இன்னும் மெருகேறும்.

அப்துல்லாஹ்
கோவை
அப்பாஸியா , குவைத்

வாசிக்க மட்டுமல்ல.. வாழ்க்கைக்கும்..!

வாசித்த பிறகுதான், இந்த உண்மையை உணர்ந்தோம் நாங்கள்!

பணி தொடரட்டும்!

ஜாஹிர் ஹுஸைன்
மற்றும் IPC நண்பர்கள்
தமிழகம் மற்றும் மும்பை
ஸுப்ஹான் - குவைத்

பத்திரிகை வடிவமைப்பைப் பார்த்தாலே தெரிகின்றது காஸ்ட்லி என்று!

IPC போன்ற சமூக அமைப்புக்கள், வேலை காலியாக இருக்கும் இடங்கள் குறித்த விவரங்களையும் தந்தால் வேலை தேடும் பல தமிழ் இளைஞர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்

இராஜ்குமார்
தஞ்சை
ஹஸாவியா, குவைத்



கடந்த இதழில் வெளியான சத்தியத்தில் நிலைத்திரு சகோதரா..! கட்டுரையைத் தொகுத்தவர் சகோதரி ஜினூ.'.பா அன்ஸார். தொழில்நுட்ப பிழை காரணமாக பெயர் விடுபட்டதற்கு வருந்துகின்றோம்! (ஆ-ர்)

வாசகர் வசந்தம் பகுதிக்கு வாசகர்களிடமிருந்து கடிதங்கள் வரவேற்கப்படுகின்றன. வாசகர்கள் தங்கள் படைப்புக்களை முதல் பக்கத்தில் உள்ள வசந்தம் முகவரிக்கோ அல்லது amusavir@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பலாம்.



காதலர் (அநாகரிக) தினம்!



உப்பு பெறாத 'தும்மல் தினத்திலிருந்து' மக்களுக்கு நோயின் விபரீதம் உணர்த்தும் எய்ட்ஸ் தினம் வரை, கொண்டாடும் நவீன உலகம் அன்பையும் காதலையும் வெளிப்படுத்தவும் குறிப்பிட்ட தினத்தை ஒதுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகி நிற்கிறது. 'வாலன்டைன்ஸ் டே' எனும் பெயரில் இதுகுறித்து அறிந்தவர்களும் அறியாதவர்களும்கூட பிப்ரவரி 14 தேதியில் ஒற்றை ரோஜாவை கையில் வைத்துக்கொண்டு 'காதலர் தினம்' என்று நாகரிகத்தை சீர்குலைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கி.பி. 296-இல் கிறித்துவத்துக்கு முந்தைய ரோமானிய பேரரசின் அரசனாக இருந்த ஜெர்மானிய இன மன்னன் கிளாடியஸ் II தனது படைவீரர்கள் திருமணம் புரிய தடை விதித்திருந்தான். ஆனால், கிறித்துவம் நுழைந்த பிறகு, அதன் தீவிரப் பிரச்சாரத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட வாலன்டைன் என்பவர், வீரர்களுக்கு திருமணம் செய்து வைத்து அதன் மூலம் மதப்பிரச்சாரத்தை தீவிரப்படுத்திக் கொண்டார். அதனால் மன்னனின் கோபத்துக்கு ஆளாகி அவர் சிறையில் அடைபட நேர்ந்தது. ஆனால், அங்கு சிறையதிகாரியின் மகளுடன் காதல் வயப்பட்டார். மன்னனின் எச்சரிக்கை வந்தது: வாலன்டைன் கிறித்துவ மதத்தைக் கைவிட வேண்டும். ஆனால், அதற்கு சம்மதிக்காததால் பிப்ரவரி 14 இரவு கழுவில் ஏற்றப்பட்டான். காதலுக்காகத் தன்னை இழந்ததாக அவன் பெயரில் காதலைக் கொண்டாடுகின்றது உலகம்!

உண்மையில் கிறித்துவ அஞ்ஞான கால மக்கள் கொண்டாடி வந்த 'ஆண்மை வெளிப்படுத்தும்' வகையிலான வெட்கமில்லா அநாகரிக 'காதல் திருவிழாவே' பிற்காலத்தில் வாலன்டைன் சம்பவத்துடன் இணைந்து புதிய 'காதலர் தினமாக' உருமாறியதே தவிர, இது காதல் தியாகம் அல்ல! அதுமட்டுமல்ல, கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை கிறித்துவ சபை ஏறக்குறைய இதுபோன்ற 19 ஆண்மைத் திருவிழாக்களுக்கு 'வாலன்டைன் டே' -எனும் பெயரில் அனுமதி வழங்கியிருந்தது.

எனவே, மேற்கத்திய விபரீத பண்பாட்டின் உருமாறிய கலவையே இதுவன்றி ஆளுமையின் உன்னத வெளிப்பாடு அல்ல! திருமண பந்தத்துக்கு வெளியே, காதலின் பெயரால் இளைஞர்-இளைஞிகளை வீதிக்கு வரவழைத்து கொட்டமடிக்கச் செய்யும் பண்பாட்டுச் சீரழிவே அன்றி பண்பாட்டு அடையாளம் அல்ல! முதலில் தனிமை, பிறகு அண்மை, இணங்கினால் இனிமை(?) மறுத்தால் வன்மை என்று இனக்கவர்ச்சியில் முடிந்து வாழ்வை கண்ணிமைக்கும் நேரத்தில் கனக்கச் செய்துவிடும் அநாகரிக சங்கமமே அது! ஓர் ஆணும் பெண்ணும் தனிமையில் அன்பை வெளிப்படுத்துவது என்பது எந்தவிதத்திலும் பண்பாட்டு அம்சமாக இருக்க முடியாது. சற்றே சிந்தியுங்கள்!

வெறும் வாழ்த்து அட்டையிலும், ஒற்றை ரோஜாவிலும் மட்டுமே பதிந்திருப்பதா காதலும் அன்பும்? இல்லை, மனஅட்டையிலும் வாழ்க்கைப் பூந்தோட்டத்தின் ஒவ்வொரு மொட்டிலும் அல்லவா பொதிந்திருக்க வேண்டும்? மணமுடித்தவளை(னை) ஒரு நாள் மட்டுமே காதலிக்கவா வாழ்க்கை? மாறாக, நமது வாழ்வில் ஒவ்வொரு நாளும், மணித்துளியும், நாழிகையும் தம்பதிகளின் 'காதலர் தினமாக' அல்லவா இருக்க வேண்டும்? காதலும் அன்பும் உண்மையானது எனில், ஆகுமான வழியில் பரஸ்பரம் வாழ்வில் இணைந்து செயல்களில்-வார்த்தைகளில் வெளிப்படுத்தி முன்னுதாரணமாகத் திகழ்வதுதானே முறை?

சரி, காதலை வெளிப்படுத்துவது எப்படி? உலகப்பொதுமறை திருக்குர்ஆன் கூறுகின்றது:

"இறைவன்தான் உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்தான்
" மேலும், அதிலிருந்தே அதனுடைய துணையைப் படைத்தான்,
அதனிடம் அது அமைதியைப் பெறுவதற்காக!' '

ஆனால், வாலன்டைன் டே தருவது என்ன? அமைதியைத் தொலைத்து நினைவுகளை மழுங்கச் செய்து, கொண்டாட்டங்களின் பெயரால் மனஉளைச்சலைத்தானே...!

எனவே, உண்மையான காதலை நீங்கள் வெளிப்படுத்த விரும்பினால் - கொண்டாட நாடினால், அதனைத் தினமும் கொண்டாடுங்கள், நீங்கள் பரஸ்பரம் மணமுடித்த வாழ்க்கைத்துணையுடன்! அதுதான் உண்மை வழி..நேரிய வழி..! அதை விடுத்து, மதியை மழுங்கடித்து வாழ்வின் உன்னத கோட்பாடுகளை குறிப்பிட்ட தினத்துக்குள் சுருக்கச் செய்துவிடும் இதுபோன்ற அநாகரிக தினங்களை விட்டொழிப்போம்! காதலை-அன்பை அனுதினமும் போற்றுவோம்!!

அமைதி திரும்பட்டும்!

கால்நூற்றாண்டு காலமாகவே உலக செய்திகளில் அனுதினமும் அடிபடும் பெயர்: இலங்கை – ஸ்ரீலங்கா!

பிரெஞ்சுக் குடியரசுக்கு எதிரான பிரிட்டனின் போர் இலங்கையின் மீது அதன் முதல்தாக்குதலை 1795-இல் நிகழ்த்தியது. அதில் வென்ற பிறகு, 1803 முதல் கண்டி அரசை கைப்பற்ற கண்டிப் போர்களில் இறங்கியது. பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த சம்பவங்களுக்குப் பிறகு 1919-ஆம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. இந்திய சுதந்தரப் போராட்டத்தினால் ஈர்க்கப்பட்டு பூர்ண சுயராஜ்யக் கொள்கை முழக்கத்துடன் 1924-இல் ஜாப்னா இளைஞர் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது.

சுதந்தர முழக்கங்கள் ஒருபுறம் நடக்க, 1934-இல் ஏற்பட்ட பஞ்சம், அதனைத் தொடர்ந்து வந்த மலேரியா நோய் நாட்டை பாதித்தது. ஏறக்குறைய 125,000 மக்கள் இறந்ததாகக் கூறப்பட்டது. 1935-இல்,இளைஞர் லீகுகளிலிருந்து உருவான 'மார்க்சிஸ்ட் லங்க சமா சமாஜ கட்சி ' சுதந்தரத்துக்கான முதல் குரலை பகிரங்கமாக எழுப்பியது.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் 1945, ஜனவரி 27-இல் இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவர் அதன் ஆண்டுக் கூட்டத்தில் 'சுதந்தரத்தைத் தவிர குறைவான எதுவும் ஏற்கப்படமாட்டாது' என முழங்கினார்.

பின்னர் 1946, அக்டோபரில் நடந்த மாபெரும் வேலைநிறுத்தம் இலங்கை சுதந்தர போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இறுதியில், 1947-இல் நடந்த தேர்தலில் சேனநாயகாவின் ஐக்கிய தேசிய கட்சி பெரும்பான்மை இடங்களுடன் வெற்றி பெற்று பண்டாரநாயகே-வின் சிங்கள மஹா சபா மற்றும் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் ஆதரவுடன் சிறுபான்மை அரசாக பதவியேற்றது. அதன் பின்னர், வேறு வழி இன்றி ஆங்கிலேயர்கள் இலங்கை சுதந்தரத்துக்கான ஏற்பாடுகளை செய்து 1948, பிப்ரவரி 4-இல் நிறைவேற்றினர். பாடுபட்டு பெற்ற சுதந்தர இலங்கை இன்று பிரச்னைகளில் கட்டுண்டு அம்மக்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பிழைப்பு தேடி சிதறிக் கிடக்கின்றார்கள்.

பிரச்னைகள் அனைத்திலிருந்தும் இலங்கை விரைவில் விடுபட்டு அங்கு அமைதி நிலவ இறைவன் அருள்பாலிக்கட்டும்!

அமுசவிர்
ஆசிரியர்
amusavir@gmail.com

மு.அ.
அப்துல் முஸவ்விர்

முகப்புக் கட்டுரை

குன்றிலிட்ட விளக்காய் குவைத்...!

வளர்ச்சிப் பாதையில்...!



காலம்தான் எவ்வளவு விரைவாக விருண்டோடுகின்றது! 1991 ஈராக் ஆக்கிரமிப்பால் எரிந்துபோன எண்ணெய்க் கிணறுகள், சிதறுண்ட கட்டடங்கள் என்று நொறுங்கிப்போன குவைத் எண்ணிப்பார்க்க முடியாத வகையில் மிகக் குறைந்த காலகட்டத்தில் தன்னை மீட்டெடுத்துக் கொண்டது.

மாற்றம்தான் மாறாதது என்பார்கள். குவைத் விஷயத்தில் அது நாள்தோறும் அமலாகின்றது. பெருகும் எண்ணெய்வளம், தூய சுகாதாரமான உணவு, நவீன மருத்துவ வசதிகள், தரமான கல்வி, காலத்துக்கும் தேவைக்கும் ஏற்றார்போல் உள்கட்டமைப்பு வளர்ச்சி, நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகள் என்று அனைத்துத் துறைகளிலும் ஆக்கபூர்வ வளர்ச்சி காணும் குவைத்தின் முன்னேற்றத்தில் இந்நாட்டு மக்களுடன் இணைந்து இலட்சக்கணக்கில் வெளிநாட்டவராகிய நாமும் பங்கு வகிக்கின்றோம் என்பது பெருமைதானே!

உலக வரைபடத்தில் மிகச் சிறிய புள்ளியாகத் தென்பட்டாலும், அமெரிக்க டாலர் உள்ளிட்ட ஏனைய உலக நாணயங்களைவிட அதிக சந்தை மதிப்பு கொண்டு, வந்தாரை வாழ வைக்கும் நம் குவைத் குறித்த வரலாற்றையும் அதன் வியத்தகு வளர்ச்சியையும் அறிவது மிக்க அவசியம். குற்றங்குறைகள் எங்குதான் இல்லை. இவற்றையெல்லாம் மீறி பெரும்பாலானவர்களை, அவர்தம் வருங்காலம் வளமாக அமைய இறையருளால் குவைத் வழிவகுத்துக் கொண்டிருக்கின்றது என்பது மறக்க – மறுக்க முடியாத உண்மை!

குவைத்: ஒரு வரலாற்றுப் பார்வை

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே குவைத் - ஆரம்பகால உலக நாகரிகத்தின் ஒரு அங்கமாகவும், மெசபடோமியா நாகரிகம் சார்ந்த நகரங்களுடன் வணிகத்தொடர்பு கொண்ட பிரதேசமாகவும் இருந்து வந்தது. கிரேக்கர்கள் அதனை தமது 'காலனி'யாக வைத்துக் கொண்டிருந்தனர்.

18-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மத்திய அரேபியாவின் 'அனிஜா கோத்திரத்தார்' குவைத்--தைக் கண்டுபிடித்தனர். கிரேக்கர் ஆதிக்கத்திற்குப் பின்னர் தன்னாட்சிப் பிரதேசமாக மாறிய குவைத், ஸபா குடும்பத்தைச் சேர்ந்த அப்துர் ரஹீம் அஸ்-ஸபா–வை தனது ஷேக் ஆட்சியின் முதல் மன்னராக அறிவித்தது. இருப்பினும் உஸ்மானியர்கள் குவைத்-ஐ தமது ஆதிக்கத்தின் கீழே வைத்திருந்தனர். அது முதல் இன்று வரை பல ஏற்ற இறக்கங்கள் கண்ட குவைத்தின் வரலாற்றையும் அதன் வளர்ச்சியையும் பின்வருமாறு நோக்க முடியும்:-

கி.பி. 1899 முதல் கி.பி. 1925 வரை

உஸ்மானிய பேரரசு ஜெர்மனி உதவியுடன் ஷேக் ஆட்சியை அபகரிக்க முயல ஷேக் ஸபா, உதவிக்காக பிரிட்டனை நாடினார். பிரிட்டனும் உதவி செய்தது.

குவைத்தின் சுதந்தரத்தைப் பிரிட்டன் அங்கீகரித்தது. எனினும், நஜ்த் பிரதேசத்தினர் குவைத் மீது தாக்குதல் தொடுத்தனர். பின்னர், 1921-இல் அவர்கள் பிரிட்டன் உதவியுடன் குவைத்துடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டனர். பின்னர், அரபுதேசம் முழுவதற்கும் குவைத்துக்கும் இடையே ஒரு பொதுமண்டலம் 1922-இல்



உருவாக்கப்பட்டது. அதே ஆண்டில், அண்டைநாடான ஈராக்-குடன் தனது எல்லையை வரையறுத்துக் கொண்டது குவைத்.

கி.பி. 1926 முதல் கி.பி. 1950 வரை

குவைத்-தின் இன்றைய செல்வசெழிப்புக்குக் காரணமான 'கருப்புத் தங்கம்' - பெட்ரோல் 1938-இல் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னர், எட்டு ஆண்டுகளில் இந்த எண்ணெய் சுத்திகரிப்பு செய்ய வளைகுடா எண்ணெய் கழகம் மற்றும் அமெரிக்க நிறுவனங்கள் தொழிற்சாலைகள் தொடங்கி முழுமூச்சுடன் ஈடுபட்டன. 1946 முதல் இப்பணி முழுவேகத்துடன் நடந்தது. அன்று ஆரம்பித்தது குவைத் வளர்ச்சி!

கி.பி. 1951 முதல் கி.பி. 1975 வரை

எண்ணெய் கிணறுகள் கண்டுபிடிப்பு ஆண்டுதோறும் அதிகரித்து சென்றது. எண்ணெய் வருவாய், நாட்டின் உள்கட்டுமான வளர்ச்சிக்கும் பொதுநல திட்டங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஏறக்குறைய ஸ்திரத்தன்மைக்கு குவைத் வந்தவுடன், அதற்கு தான் அளித்து வந்த இராணுவ பாதுகாப்பை பிரிட்டன் திரும்பப் பெற்றுக் கொண்டது. 1961, ஜூன் 19-இல் நடந்த இச்சம்பவத்துக்குப் பின்னர் ஷேக் தன்னை 'அமீர்' என பிரகடனப்படுத்திக் கொண்டார். நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு குவைத் தன்னை 'அரப் லீக்' அமைப்புடன் இணைத்துக் கொண்டது.

1961 டிஸம்பரில் குவைத்துக்கென்று ஓர் அரசியல் சட்டத்தை வரையறுக்க ஒரு குழு அமைக்கப்பட்டது. 1963, ஜனவரி மாதம் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டம் நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் 'அமீர்'-வசம் ஒப்படைக்க வகை செய்தது. அவர் தலைமையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் குழு ஒன்று செயல்படும். இதனை அமல்படுத்தும் வகையில் ஜனவரி 23 அன்று புதிய பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதன் பின்னர், அரசியல் ரீதியான மாற்றங்கள் சூடுபிடிக்க ஆரம்பித்தன. ஸவூதி அரேபியா, குவைத்துடனான தனது எல்லைப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்கின்றது. இதன் விளைவாக 'பொது எல்லை மண்டலம்' திரும்பப் பெறப்பட்டது. அப்பகுதியில் நிலவும் எண்ணெய்வள உரிமை குறித்தும் ஒப்பந்தம் ஏற்பட்டது.

1973-இல் சர்வதேச பொருளாதார சந்தையில் ஏற்பட்ட எண்ணெய் விலையேற்றம் குவைத்தின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டு வந்தது. நாட்டின் முழு எண்ணெய் வளத்தையும் குவைத் அரசாங்கம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து அதனை 'குவைத் எண்ணெய் நிறுவனம்' - Kuwait Oil Corporation-KOC என பெயர் மாற்றியது.

கி.பி. 1976 முதல் கி.பி. 2000 வரை

1976-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தேசிய பாராளுமன்றத்தை கலைக்க உத்தரவிடப்பட்டது. பின்னர், 1971-ஆம் ஆண்டு குவைத்தின் மாபெரும் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஷேக் ஜாபிர்-அல்-அஹ்மத்-அஸ்-ஸபா புதிய அமீராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடைய ஆட்சிக்காலத்தில் நவீன உலகின் வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து குவைத்தும் உலக அரங்கில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.

1985-ஆம் ஆண்டு ஏற்பட்ட குழப்பங்களால், அந்த ஆண்டும் அதற்கு அடுத்த ஆண்டும் ஏறக்குறைய 27,000 வெளிநாட்டு மக்களை தனது நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானது குவைத். அதன் பின்னர், குவைத்துக்கு அமெரிக்காவும் ருஷ்யாவும் பாதுகாப்பு உதவியளித்தன.

1990-இல் ஜூன், 10 அன்று நடைபெற்ற புதிய பாராளுமன்றத்துக்கான தேர்தலை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன. அதே ஆண்டில், குவைத் வரலாற்றின் ஒரு துக்ககரமான நிகழ்வு ஈடேறுகின்றது. ஏறக்குறைய ஒரு இலட்சம் படையினருடன் குவைத்தை ஆக்கிரமிக்கும் ஈராக், அதனை தனது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. ஈராக்கின் இந்த அத்துமீறலை ஐக்கிய நாடுகள் சபையும், அரப் லீக் அமைப்பும் வன்மையாகக் கண்டித்தன.

சில மாதங்கள் எச்சரிக்கைக்குப் பின்னர், அமெரிக்கா தலைமையிலான 28 நாடுகளின் படை குவைத்தை மீட்டது.

1991, பிப்ரவரி 26,-இல் மீட்கப்பட்ட குவைத்தில் ஈராக் ஏற்படுத்திய சேதத்தால் எண்ணெய்க் கிணறுகள் பல கொளுந்துவிட்டு



நிலை மக்களாட்சியுடன் கூடிய முடியாட்சி. 5 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.

சுதந்தரம் பிரிட்டனிடமிருந்து... ஜூன் 19, 1961. எனினும், பிப்ரவரி 25, 1950 நாள் தேசிய விடுமுறையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இது தவிர, ஈராக் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்ட பிபரவரி 26 -ஆம் விடுதலை தினமாக போற்றப்படுகின்றது.

அரசு அமீர்: ஷேக் ஸபா அல்-அஹ்மத் அல்-ஜாபிர் அஸ்-ஸபா
தேசிய பாராளுமன்றம் -மஜ்லிஸ் அல்-உம்மா 50 இடங்களைக் கொண்டது.
மக்கள் தொகை: 2.75 அமீர்:



புவிஇயல் மக்கள் தொகை: 2.75 மில்லியன்(2005) 58 % ஆண்கள், 42 % பெண்கள்
மக்கள் தொகை பெருக்க வீதம்: 3.3 %
பரப்பளவு: 17,820 கி.மீ. 2 அடர்த்தி: 154 கி.மீ. 2 -க்கு
எல்லை: 462 கி.மீ. (ஸவூதிஅரேபியா 222 கி.மீ.,ஈராக் 240கி.மீ.) கடல் எல்லை: 499 கி.மீ.
மனிதவள மேம்பாடு: 33-ஆவது இடம்(177 -இல்)

எரிந்தன. அவற்றை அணைக்கவே பல மாதங்கள் பிடித்தன. நாட்டின் உள்கட்டுமான அமைப்பு கடும் சேதமுற்றது. எனினும், சாம்பலிலிருந்து மீண்டெழுந்த .ீபீனிக்ஸ் பறவை போல் குவைத் பெரும்பாலான எண்ணெய்க் கிணறுகளை ஒரே வருடத்தில் அணைத்தது. போருக்கான செலவாக 16.5 பில்லியன் டாலர்களை அமெரிக்காவுக்கு வழங்கியது.

பின்னர், 1992 அக்டோபர் 5, -இல் புதிய பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெற, பெரும்பாலான எதிர்க்கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். பின்னர், தனது உள்கட்டுமான வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்த ஆரம்பித்த குவைத் இலட்சக்கணக்கான வெளிநாட்டவரை அதில் ஈடுபடுத்தி அவர்களுக்கும் வாழ்வளித்தது.

2001 முதல் இன்று வரை

2003-இல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் பல புதுமுகங்கள் வென்றனர்.



இலண்டன் மருத்துவப் படிப்பில் ஆசிய மாணவர்களில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றார் அபீரா உதைபி என்ற குவைத் சகோதரி!

குவைத் மறுகட்டுமான வளர்ச்சியின் தந்தை என வருணிக்கப்பட்ட ஷேக் ஜாபிர்-அஸ்-ஸபா ஏறக்குறைய 30 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த பின்னர் 2006-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இயற்கை எய்தினார். (நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், மேலும், நிச்சயமாக அவனிடமே நாம் திரும்பிச் செல்வோராய் இருக்கின்றோம்!)

அதன் பின்னர், பிரதம மந்திரியாக இருந்த ஷேக் அஹ்மத்-அஸ்-ஸபா புதிய 'அமீர்' ஆக பொறுப்பேற்றார். பின்னர் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் பெண்கள் முதல் முறையாக வாக்களிக்கவும், போட்டியிடவும் செய்தனர். 249 வெட்பாளர்களில் 28 பேர் பெண்களாக இருந்தும் அதில் ஒருவர்கூட வெற்றி பெறவில்லை!

வளர்ச்சிப் பாதையில்...

பொருளாதாரத் துறை

பரப்பில் சிறிதாக இருப்பினும், குவைத் தனது வளத்தைப் பயன்படுத்தி தொழில்நுட்பத்தில் வேகமாக முன்னேறுகின்றது.



பொருளாதார வளர்ச்சியில் குவைத், உலகின் முன்னணி நாடாக விளங்குகின்றது. குவைத் முழுவதும் பரவிக் கிடக்கும் எண்ணெய் வளம் மட்டுமல்ல, அதன் வருவாயின் 10% வெளிநாட்டு முதலீடாக இருப்பதும் இத்தகைய வியத்தகு வளர்ச்சிக்கு காரணமாகும்.'எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடுகள்' - OPEC அமைப்பின் முக்கிய உறுப்பினரான குவைத், 96.5 பில்லியன் பாரல்கள் எண்ணெய் வளம் கொண்டிருக்கின்றது. குவைத் மத்திய வங்கியின் அறிக்கைப்படி, 1977 வரை நாட்டின் எரிவாயு கைஇருப்பு 52.4 டிரில்லியன் கனஅடி (அதாவது உலகின் மொத்த கைஇருப்பில் 1.1%) ஆக இருக்கின்றது. அரசு நிறுவனமான KOC எண்ணெய் நிறுவனம் உலகின் ஏழாவது பெரிய எண்ணெய் நிறுவனம். குவைத்தின் மொத்த எண்ணெய் உற்பத்தியில் ஏறக்குறைய 78% அளவு எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தற்போதைய எண்ணெய் வளம் இன்னும் 150 ஆண்டுகள் வரை இன்றைய நிலையிலே இருக்கக்கூடியது, புதிதாக எண்ணெய்க் கிணறுகளோ எண்ணெய் வளங்களோ கண்டுபிடிக்கப்படாமல் இருப்பினும் சரியே!

எண்ணெய் வளத்தைத் தவிர்த்து மீன்பிடித் தொழில் குவைத்தின் முக்கிய பொருளாதார அம்சமாகும். ஆண்டுதோறும் 9,000 டன் அளவுக்கு இதன் உற்பத்தி அளவு இருக்கின்றது. விவசாயம் மற்றும் உணவு உற்பத்தி குறிப்பிட்ட அளவு (தேசிய உற்பத்தியில் 2%) மட்டுமே!

கல்வி மற்றும் சுகாதாரம்

கல்வி மற்றும் சுகாதார தரத்தைப் பொருத்தவரை குவைத் உலகின் முதல் நாடாகும். இதற்காக பெருமளவு நிதியை ஒதக்கி இருக்கின்றது. குடிமக்கள் அனைவருக்கும் கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் தரப்படுகின்றது. 15,500 மாணவர்களைக் கொண்ட குவைத் பல்கலைக்கழகம் 2,000 வெளிநாட்டு மாணவர்களுக்கும் கல்வி வழங்குகின்றது. மேலும், நாட்டு மக்களில் 2% பேர் முதியோர் கல்வி மூலம் பயன்பெறுகின்றனர்.

எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர், திருக் குர்ஆன் மனனம் உள்ளிட்ட ஒரு குறிப்பிட்ட கல்வி முறைக்குள்ளே வலம் வந்த குவைத் 1911-இல் 'அல்-முபாரக்கியா' எனும் நாட்டின் முதல் பள்ளிக் கூடத்தை ஆரம்பித்து கல்வித் துறையின் மைல்கல்லைத் தொட ஆரம்பித்தது. ஓழங்கமைக்கப்பட்ட சீரான கல்விமுறை 1936-இல் கல்வித்துறைக்கான தனியொரு கவுன்சில் ஏற்படுத்தப்பட்ட பின்னரே உருவானது.பொதுவாக, எண்ணெய் வளமிக்க வளைகுடா நாடுகள் தமது செல்வச் செழிப்பின் மிதப்பால் கல்வியில் பின்தங்கியே இருப்பார்கள் எனும் கூற்றை சமீபத்தில் பொய்யாக்கிக் காட்டினார் இலண்டன் மருத்துவக்கல்லூரியில் பயிலும் ஒரு குவைத் மாணவி. இந்த வருடம் இலண்டன் மருத்துவப் படிப்பில் ஆசிய மாணவர்களில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்று சாதனை படைத்தார் அபீரா உதைபி என்ற அந்த சகோதரி!

உயர்தர சுகாதாரம் வழங்கப்பட்டு பெரும் செலவிலான மருத்துவமும் இலவசமாக அளிக்கப்படுகின்றது. ஆறு பொது மருத்துவமனைகள் மட்டுமல்லாது, கிளை மருத்துவநிலையங்களும் குவைத்தின் அனைத்துப் பகுதிகளிலும் செயல்பட்டு சேவையாற்றி வருகின்றன. சுகாதாரத் துறையின் உச்சகட்ட செயல்பாடாக வளைகுடா விலேயே மிகப்பெரிய மருத்துவமனை ஒன்று



குடிமக்கள் அனைவருக்கும் கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் தரப்படுகின்றது.

குவைத்தில் கட்டப்பட்டு வருகின்றது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

மாறிவரும் உலக நடைமுறைகளுக்கும், புதிய தொழில்நுட்பத்துக்கும் ஈடுகொடுக்கும் வகையில் குவைத் தனது வளத்தைப் பயன்படுத்தி வேகமாக முன்னேறுகின்றது. புதுப்புது ஆய்வுகள், பெருகி வரும் சவால்கள் என்று அனைத்து விஷயங்களிலும் கவனம் செலுத்தி பெரும் நிதியை ஒதுக்கியிருக்கின்றது.அறிவியல் சார்ந்த நவீன குவைத்தை உருவாக்கும் முயற்சியில் குவைத் அறிவியல் கழகம்- Kuwait Foundation of Advancement of Sciences, உள்ளிட்ட பல ஆய்வுக் கழகங்கள் முழுவீச்சுடன் செயற்பட்டு வருகின்றன.

மார்க்கம், பண்பாடு, கலை, இலக்கியம்

மார்க்கத் துறையை கவனிக்கும் அமைச்சகம் மற்றும் தனியார் அமைப்புக்கள் பல உலகம் முழுவதும் ஆக்கபூர்வ வளர்ச்சிக்காக நன்கொடைகளை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றன. இஸ்லாமிய மார்க்க அடிப்படையில் அமைந்த அரபுப் பண்பாட்டுடன் இணைந்து குவைத் மிளிர்கின்றது. இங்குள்ள பெரிய மசூதி, குவைத் இஸ்லாமியப் பண்பாட்டின் அடையாளமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. (இது பற்றிய சிறப்புக் கட்டுரை, ஏற்கனவே 'வசந்தம்' பிறப்பிதழ் மே, 2007-இல் வெளியாகியுள்ளது). எண்ணெய் வளம் குவைத்தை நவீனமயமாக்கியிருந்தாலும் இந்த பாரம்பர்ய பண்பாட்டுச் சின்னங்களை அது பாதிக்கவில்லை.

மாறாக, வரலாற்று ஆவணங்கள், தொல்பொருள் உள்ளிட்ட பழமையான பண்பாட்டைப் பிரதிபலிக்கக்கூடிய ஒவ்வொரு அம்சத்தையும் நவீனப்படுத்தவும், பாதுகாக்கவும் குவைத் தனது பொருளாதார வளத்தைப் பயன்படுத்திக்கொண்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆவணக் காப்பகங்களில் குவைத் மியூசியமும் ஒன்று.



தற்போதைய எண்ணெய் வளம் இன்னும் 150 ஆண்டுகள் வரை இன்றைய நிலையிலே இருக்கக்கூடியது

தகவல் தொழில்நுட்பம்

நாளிதழ்கள் முதல் சாடிலைட் சானல்கள் வரை, வளைகுடா நாடுகளின் தகவல் தலைநகரமாக குவைத் வளர்ந்து வருவதாகக் கூறப்ப டுகின்றது. மக்களாட்சியுடன் இணைந்த முடியாட்சியாக இருப்பினும் அரசாங்கம் மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றது என்பதை பத்திரிகை சுதந்தரம் சான்று பருகின்றது. ஐந்துக்கும் மேற்பட்ட அரபிமொழிப் பத்திரிகைகள் மற்றும் மூன்று ஆங்கில நாளிதழ்கள், வார-மாத இதழ்கள் பலவும் வெளிவருகின்றன. இது தவிர, வெளி நாட்டு மொழிகளில் மாத்யமம் எனும் மலையாள நாளிதழின் குவைத் பதிப்பு கடந்த இரண்டு வருடங்களாகவும் தமிழில் தனிச்சுற்றுப் பத்திரிகைகளும் வெளிவருகின்றன.குவைத்தின் மிகப்பெரிய இஸ்லாமிய நிலையமான இஸ்லாமிய நிலையம் IPC சார்பாக - புஷ்ரா- அரபி மாத இதழ் மற்றும் அதன் துணை இதழ்களாக தமிழ் (வசந்தம்), தெலுகு (நலவன்கா), மலையாளம் (சந்தேஷம்) ஆகிய மொழிகளில் மாதப் பத்திரிகைகளும் வருகின்றன. இவை மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று மக்களின் ஒழுக்க மேம்பாட்டுக்குக் கட்டியம் கூறுகின்றன. வானொலி, தொலைக் காட்சிகளில் அரபி மொழிகளில் மட்டும் அல்லாது உர்தூ உள்ளிட்ட வெளிநாட்டு மொழி களிலும் நிகழ்ச்சிகள், செய்திகள் ஒலிபரப்பாகின்றன.

உள்கட்டமைப்பு

சிறிய நிலப் பரப்பு கொண்ட குவைத் போன்ற நாடுகளில்



பெரிய மசூதி, குவைத் இஸ்லாமியப் பண்பாட் டின் அடையாள மாகத் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

உள்கட்டுமான அமைப்பு இவ்வளவு வசதியுடன் அமையக்கூடுமா என்று வியக்க வைக்கின்றது, இந் நாட் டின் உள் கட் ட மைப் பு வசதிகள். பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருக்கும் இதன் போக்குவரத்து வசதிகளின் குறிப்பிடத்தக்க அம்சமாக அதன் கிழக்குப் பகுதி 4700 கி.மீ. அளவு சாலை அமைப்பைக் கொண்டது.

மக்கள் தொகைக்கு இணையான எண்ணிக்கை கொண்ட வாகனங்களுக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தித் தரும் வகையில் அகண்ட சாலைகளுடன் போக்குவரத்து அதிநவீன வசதியாகத் திகழ்கின்றது.

பிற நாடுகளுடனான உறவு

பொருளாதார மண்டலத்தின் முக்கிய கேந்திரமான குவைத்துடன் ஆரம்ப காலம் முதலே இந்தியா நல்லுறவு பேணி வருகின்றது. குவைத் உடைய பண்டைய நாணயம் இந்தியாவின் 'ரூபாய்' என்பது இங்கு நினைவுகூறத்தக்க அம்சமாகும். வெளிநாட்டவரில் மிக அதிக அளவான மனிதவளத்தை இந்தியாவிடமிருந்து குவைத் பெறுகின்றது.

அதேபோல், இலங்கை உள்ளிட்ட சிறிய நாடுகளுடனும் தனது பொருளாதார உறவைப் பலப்படுத்தி அவற்றின் மேம்பாட்டுக்கும் குவைத் வழிகோலுகின்றது. குவைத் திவானியாக்களை மணம் வீசச் செய்வதில் இலங்கையின் தேயிலைக்கு முக்கிய பங்கு உண்டு.

இத்துணை சிறப்புக்களுடன் ஒளிரும் குவைத்-தின் வளர்ச்சியில் நாமும் பங்கு பெறுவோம். இந்நாட்டின் சட்ட-திட்டங்களுக்கு மதிப்பளித்து செயல்படுவோம். இறையருளால் நம் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்த துணை போகும் இந்நாட்டுக்கு உண்மையானவர்களாய் இருந்து குவைத்தை மென்மேலும் ஒளிரச் செய்வோம். நாமும் வளருவோம்!.. இறைவன் நாடினால்!

-என்ஸைக்யோபீடியா மற்றும் குவைத் இன்போ டாட் காம் புள்ளிவிவரஉதவியுடன்



IPC சார்பாக தமிழ்,.தெலுகு, மலையாளம் ஆகிய மொழிகளில் மாதப் பத்திரிகைகளும் வருகின்றன.

என்.எம். எம். ஹுஸைன்



முகப்புக் கட்டுரை



உங்களையும் கண்ணியப்படுத்திக் கொள்ளுங்கள்!

பிரபஞ்சப் படைப்பாளனான அல்லாஹ் தன் படைப்புக்களாகிய சூரியனையும், சந்திரனையும் மையமாக வைத்து காலத்தையும், நேரத்தையும் கணக்கிடும் முறையை மனிதனுக்குக் கற்றுத் தந்திருக்கின்றான். இது அவனுடைய அற்புத ஏற்பாடாகும்!

இது பற்றி திருக் குர்ஆனில் இவ்வாறு குறிப்பிடுகிறான் :

"அவனே, சூரியனை வெளிச்சம் தரக்கூடியதாக அமைத்தான், சந்திரனுக்கு ஒளியைக் கொடுத்தான். மேலும், வளர்ந்து தேயும் நிலைகளைச் சந்திரனுக்கு நிர்ணயம் செய்தான், இவற்றின் மூலம் ஆண்டுகளின் எண்ணிக்கையையும், கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்வதற்காக! இவற்றையெல்லாம் அல்லாஹ் சத்தியத்துடனேயே படைத்துள்ளான். அறிவுடைய மக்களுக்கு அவன் தன் சான்றுகளைத் தெளிவாக விளக்குகின்றான். திண்ணமாக, இரவு - பகல் மாறி மாறி வருவதிலும், வானங்கள், மற்றும் பூமியில் அல்லாஹ் படைத்திருப்பவற்றிலும் (தவறான நோக்கிலிருந்தும் நடத்தையிலிருந்தும்) தவிர்ந்து கொள்ள நாடும் மக்களுக்கு பல சான்றுகள் உள்ளன~ (10:5,6)

இந்த வசனத்துக்கு விளக்கம் தரும்போது மௌலானா அபுல் அ'்லா மௌதூதி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்: 'அதாவது, யாரிடம் பின்வரும் பண்புகள் உள்ளனவோ அவர்கள் மட்டுமே இந்தச் சான்றுகளினால் யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ள முடியும் : (1) அவர்கள் அஞ்ஞான மாச்சரியங்களை விட்டுத் தூய்மையாகி, அறிவைப் பெற்றிட அல்லாஹ் மனிதனுக்கு அளித்திருக்கும் சாதனங்களைப் பயன்படுத்திட வேண்டும். (2) தவறிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும், நேரிய பாதையை மேற்கொள்ள வேண்டும் எனும் துடிப்பை சுயமாகவே கொண்டவர்களாக இருக்க வேண்டும்'!

திருக்குர்ஆனில் மற்றுமோர் இடத்தில் இறைவன் இவ்வாறு குறிப்பிடுகிறான்:

"(நபியே! தேய்ந்து வளரும்) பிறைகள் பற்றி உம்மிடம் கேட்கின்றார்கள். கூறுவீராக : அவை மக்களுக்குக் காலங் காட்டியாகவும், ஹஜ்ஜுடைய நாட்களை அறிவிப்பவையாகவும் இருக்கின்றன! (2:189)

இவ்வாறு காலத்தைத் துல்லியமாக நிர்ணயித்த எல்லாம் வல்ல இறைவன் தனது காலக்கணிப்பு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

"உண்மையாக அல்லாஹ்விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகும். வானங்களையும் பூமியையும் அவன் படைத்த நாள் முதல் அல்லாஹ்வின் பதிவேட்டில் இவ்வாறே உள்ளது. அவற்றில் நான்கு மாதங்கள் சங்கைக்குரியன. இது தான் சரியான நெறிமுறையாகும். எனவே, இம்மாதங்களில் உங்களுக்கு நீங்களே அநீதியிழைத்துக் கொள்ளாதீர்கள்...!" (10:36)

முஹம்மத் (ஸல்) அவர்களும் தனது இறுதி ஹஜ் புனித யாத்திரையின்போது இவ்வாறு கூறினார்கள்:

"வானங்களையும் பூமியையும் அல்லாஹ் படைத்த நாள் முதல் அவனது விதிப்படியே காலம் ஓடிக்கொண்டிருக்கிறது. வருடத்தில் 12 மாதங்கள், அவற்றில் 4 மாதங்கள் கண்ணியப்படுத்தப் பட்டுள்ளன. மூன்று தொடராகவும் ஒன்று இடையில் தனியாகவும் அமைந்துள்ளது. தொடரானவை : துல்கஅதா, துல்ஹஜ், முஹர்ரம் என்பனவாகும். தனியாக வருவது ஜமாதுல் ஆகிருக்கும் ஷஅபானுக்குமிடையில் அமைந்துள்ள ரஜப் மாதம் ஆகும்!"

அறிவிப்பாளர் : அபூபக்கர் (ரலி)
ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

எனவே, சந்திர வருடம் 12 மாதங்களைக் கொண்டது. அவற்றில் 4 மாதங்கள் கண்ணியப்படுத்தப் பட்டுள்ளன என்பதை திருக்குர்ஆனும், அவை எந்தெந்த மாதங்கள் என்பதை இறைத்தூதர் வாழ்க்கை முறையும் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

இந்த வகையில்தான் புவிமீது மனித வரலாற்றின் ஆரம்பம் தொட்டு இறை அத்தாட்சியின் அடிப்படையில் பன்னிரண்டு மாதங்கள் மூலம் காலக் கணிப்பீடு நடந்து வருகிறது. ஏக இறைவனான அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்!

அத்துடன், அஞ்ஞானக்கால மக்கள், நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்பிருந்தே நபி இப்றாஹீம் (அலை) அவர்களின்

மார்க்கத்தில் மிஞ்சியவற்றை அமல்படுத்தி வரக்கூடியவர்களாக காணப்பட்டனர். இதன் தொடராகத்தான், இறை இல்லத்தை ஹஜ் செய்ததும் மக்கமாநகரை புனிதமானதாகக் கருதி வந்ததும், குறிப்பிட்ட 4 மாதங்களை கண்ணியப்படுத்தியதும் ஆகும். என்றாலும் இவற்றை அஞ்ஞானக்கால பழக்கங்களுடன் கலந்தே செய்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோல், சங்கை பொருந்திய மாதங்களுடன் அஞ்ஞானக் கலவையை பூசி தங்களின் மனோ இச்சைக்கேற்ப அவற்றை மாற்றியமைத்துக் கொண்டார்கள் .திருக் குர்ஆன் இதனை வன்மையாகக் கண்டிக்கிறது. (பார்க்க 10:37)

உத்தரவாதத்துடன் முஹர்ரம் மாதம் முழுவதும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லவும் முடிகிறது.

இங்கு இறை அடியார்கள் ஹஜ் கடமையை நிறைவேற்றவும், அவ்வாறே இடைப்பட்ட காலப்பகுதியில் உம்றா கடமையை நிறைவேற்ற வருவோருக்கு பாதுகாப்பு உத்தரவாதமாகவும் ரஜப் மாதம் புனிதமாக்கப்பட்டிருக்கின்றது.

3. மேலும் சட்டமியற்றும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டும் உரியதாகும். அவன் நாடியதை ஆகுமான தாக்குகிறான், நாடியதை விலக்குகின்றான். மேலும், தான் நாடியதை கண்ணியப் படுத்துகிறான், இவ்வதிகாரத்தில் வேறு யாருக்கும் பங்கு கிடையாது. இறைச்சட்டங்களில் மறைந்திருக்கும் ஞானம் சிலவேளை மனித அறிவுக்குப் புரியலாம் அல்லது புரியாமலிருக்கலாம். ஆனால் அச்சட்டங்களில் மாறுதல் செய்ய எவருக்கும் அதிகாரம் கிடையாது! எனவேதான், இறைவன் கண்ணியப்படுத்திய மாதங்களை தன்னிச்சைப்படி மாற்றிக்கொள்வது இறைநிராகரிப்பாகும் என திருக் குர்ஆன் (10:37) குறிப்பிடுகிறது.

4. மற்றொரு கோணத்தில், இது அல்லாஹ்வின் சோதனையாக இருக்கலாம். அதாவது தனது அடியார்களில் தனது கட்டளைக்கு முற்றிலும் வழிப்பட்டு தான் விதித்த வரம்புகளை மீறாது, அவற்றின் கண்ணியத்தைப் பேணி நடக்கக்கூடிய உண்மையான இறை நம்பிக்கையாளர்கள் யார்? என்பதை சோதித்துப் பார்ப்பதற்காக இருக்கலாம்.

மறைவானவைகளை நம்பக்கூடிய, இறைவனுக்கு அஞ்சக் கூடிய ஓர் உண்மையான இறை நம்பிக்கையாளரால் மட்டுமே இறை வரம்புகளை மீறாமல் அவற்றின் கண்ணியத்தைப் பேணி நடக்க முடியும். அதுவே மிகச் சிறந்தது என திருக் குர்ஆன் குறிப்பிடுகிறது:

"....மேலும், எவரேனும் அல்லாஹ்வினால் புனிதமானவை என்று நிர்ணயிக்கப்பட்டவைக்கு கண்ணியம் அளித்தால், அது அவருடைய அதிபதியிடத்தில் அவருக்கே பலனளிக்கத்தக்கதாகும்!" (22: 30)

எனவே இறைவனால் புனிதமாக்கப்பட்டுள்ளவை என்ற வகையில் புனித மாதங்களை கண்ணியப்படுத்துவது நமது அடிப்படைக்கடமையாகும்.

இவ்வாறு இக்காலப்பகுதியை உரியமுறையில் பயன்படுத்தி இறை உவப்பைப் பெற முயற்சிக்காமலிருப்பது மிகப் பெரும் கொடுமையும் விரயமும் ஆகும் என திருக் குர்ஆன் (10:36) குறிப்பிடுகிறது.

இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டிய மற்றொரு அம்சம் யாதெனில், இறைவன் புனிதப்படுத்தாத வேறு எந்தவொறு மாதத்தையும் நாம் புனிதப்படுத்தவோ கொண்டாடவோ முடியாது என்பதாகும். அது இறைத்தூதர்கள் பிறந்த மாதமாக இருக்கலாம் அல்லது அவர்களுக்கு நபித்துவம் கிடைத்த மாதங்களாக இருக்கலாம் அல்லது வேறு மங்களகரமான நிகழ்வுகள் இடம் பெற்ற மாதங்களாக இருக்கலாம் எவ்வாறிருப்பினும் அவற்றை விமரிசையாகக் கொண்டாடுவது திருக் குர்ஆனுக்கும் நபிவாழ்க்கைக்கும் முரண்பட்ட செயலாகும்.

அஞ்ஞானக் கால வழக்கங்களைப் போலன்றி, இம்மாதங்களை திருக் குர்ஆன் மற்றும் நபிவாழ்க்கை அடிப்படையில் கண்ணியப்படுத்தி நிறைந்த நற்பேறுகளை பெற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

கண்ணியம் எவ்வாறு?

1. பாவங்களிலிருந்து விலகிவிட வேண்டும். இக்காலங்களில் இழைக்கப்படும் குற்றங்கள் மிகவும் கடுமையானவையாகக் கருதப்படும் !
2. அதிகமாக நோன்பு நோற்பது உள்ளிட்ட நன்மைகளில் அதிகம் ஆர்வம் காட்ட வேண்டும்.
3. திருக்குர்ஆனை அதிகமாக ஓதுதல், திக்ரு-பிரார்த்தனைகளில் அதிகமாக ஈடுபடுதல் மூலம் இறைநெருக்கத்தை தேட வேண்டும்.
4. அதிகமாக தவ்பா-பாவமன்னிப்பு, இஸ்திக்பார் செய்வதன் மூலம் பாவங்களிலிருந்து விடுபட முயற்சிக்க வேண்டும்.

ஏன் அவசியம்?

இனி, இந்த மாதங்கள் ஏன் கண்ணியப்படுத்தப்பட்டுள்ளன? என்ற ஒரு கேள்வி பிறப்பது முற்றிலும் நியாயமானதே! இக்கேள்விக்கு 4 கோணங்களில் விடையளிக்கலாம்:

1. மனித வாழ்வின் பாதுகாப்பிற்கும், நிலைத்தன்மைக்கும் உத்தரவாதம் தரவேண்டியது இன்றியமையாததாகும். அந்த வகையில்தான் புனித மக்கா நகரை பாதுகாப்பு வலயமாகவும், ஒரு வருடத்தின் மூன்றிலொரு பகுதியை பாதுகாப்பு உத்தரவாதம் மிக்க புனித காலப்பகுதியாகவும் ஆக்கப்பட்டுள்ளது.
2. முதலில் துல்கஅதாவில் போராட்டங்கள், வன்முறைகள், அத்துமீறல்கள், அநீதிகள், பாவச் செயல்கள் போன்றவற்றிலிருந்து முற்றாக விலகி விடுபடுவதன் மூலம் மனிதர்கள் பாதுகாப்பு உத்தரவாதத்துடன் இறை இல்லத்தை நோக்கி வர முடியும். அவ்வாறே துல்ஹஜ் மாதத்தில் அதே பாதுகாப்பு உணர்வுடன் ஹஜ் கடமைகளை நிறைவேற்றவும் பின்னர் பாதுகாப்பு

மறுமை அருகில்....!

அத்தியாயம் 78

அந்நபா

முன்னுரை

சென்ற இதழ் தொடர்ச்சி

பின்னர், நிராகரிப்பாளர்களை நோக்கி இவ்வாறு வினவப்படுகின்றது: 'மண்ணிலிருந்து விண் வரையுள்ள இறைவனுடைய ஆற்றல்மிகு படைப்புகளும் அவற்றில் காணப்படும் நுண்ணறிவுத்திறங்களும், நன்மைகளும் உங்கள் கண்களுக்குத் தென்படவில்லையா? இவற்றையெல்லாம் படைத்த சர்வ வல்லமையுள்ள இறைவன், மறுமையைக் கொண்டு வரவோ, இறுதித் தீர்ப்பு நாள் ஒன்றினை ஏற்படுத்தவோ இயலாதவன் என்றா இவையனைத்தும் உங்களுக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன? மேலும், இந்தப் பேரண்டத்தின் பின்னணியில் முழுமையான நுண்ணறிவுத் திறனும், ஞானமும் செயல்பட்டுக் கொண்டிருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா? அவற்றைப் பார்த்த பின்பும் இதில் காணப்படும் ஒவ்வொரு பொருளும் இதில் நிகழ்ந்துவரும் ஒவ்வொரு செயலும் ஒரு நோக்கத்தைக் கொண்டதாய் இருக்கின்றது எனப் புரிந்து கொள்ளும் உங்கள் அறிவு, பேரண்டத்தின் முழுமையான அமைப்பு மட்டும் எவ்வித நோக்கமும் கொண்டதாக இல்லை என்ற கருத்தை ஏற்றுக் கொள்கின்றதா?"

இந்த மாபெரும் தொழிலகத்தில் மனிதனை மிக முக்கிய அந்தஸ்தில் அமர்த்தி, அவனுக்கு விரிவான பல அதிகாரங்கள் அளித்துவிட்ட பிறகு அவன் இங்கு தன் பணியை முடித்துக் கொண்டு செல்லும்போது அவன் அப்படியே விட்டுவிடப்படுவான்: அவனுடைய ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஓய்வூதியமோ வெகுமதிகளோ கிடைக்காது; அல்லது அவனுடைய அழிவுப் பணிகள் குறித்து எந்தக் கேள்வியும் கேட்கப்படாது, எந்த தண்டனையும் வழங்கப்படாது என்றால், இதனைவிட அபத்தமான – பொருளற்ற கருத்து வேறு என்னதான இருக்க முடியும்?.

இவ்வாறு சான்றுகள் கூறிய பின்னர், 'தீர்ப்பு வழங்கும் நாள் குறித்த நேரத்தில் நிச்சயமாக வந்தே தீரும். நீங்கள் ஏற்க மறுப்பதால் இச்சம்பவம் நிகழாது இருந்துவிடப் போவதில்லை' என்று ஆணித்தரமாக எடுத்துரைக்கப்படுகின்றது.

இதன் பின்னர், வசனம் 21 முதல் 30 வரை 'கேள்விக் கணக்குகள் கேட்கப்படும் என்பதனை எதிர்பார்க்காதவர்கள், இறைவனின் திருவசனங்களைப் பொய்யெனக் கூறியோர் ஆகியோரின் ஒவ்வொரு செயலும் எண்ணி எண்ணி எம்மிடம் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளது; அவர்களைக் கண்காணித்து பாடம் புகட்ட நரகம் மறைவாகக் காத்துக்கொண்டிருக்கிறது' என்றும் கூறப்படுகின்றது.

உர்தூ மூலம்

மௌலானா ஸையித் அபுல் அ.'.லா மௌதூதி



தமிழாக்கம்

மௌலவி அ.குத்புதீன் அஹ்மத் பாகவி

மௌலவி அ.அப்துர் ரவூ.'. ப் பாகவி

பிறகு 31 முதல் 36 வரையுள்ள வசனங்களில் எவர்கள் தம்மைப் பொறுப்புடையவர்கள் என்றும் அல்லாஹ்வின் முன் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்றும் கருதி, உலகில் வாழும்போதே தமது மறுமை வாழ்வை செம்மைப்படுத்திக் கொள்ளும் அக்கறையுடன் உழைத்தார்களோ, அவர்களுக்குரிய உன்னதமான நற்கூலி எடுத்துரைக்கப்படுகின்றது.

இறுதியில் இறை நீதிமன்றம் சித்தரித்துக் காட்டப்படுகின்றது. அங்கு எவரும் பிடிவாதமாக அமர்ந்து கொண்டு தம்மிடம் பரிந்துரை வேண்டுவோர்க்கு மன்னிப்பு வாங்கிக் கொடுத்து விடுவிப்பது ஒருபுறம் இருக்கட்டும், அனுமதியின்றி எவரும் வாயைக் கூடத் திறக்க முடியாது; அனுமதி கிடைத்தாலும்கூட 'யாருக்காக அவர் பரிந்துரை வழங்குமாறு இறைவனால் அனுமதிக்கப்படுகின்றாரோ, அவருக்காக மட்டுமே பரிந்துரை வழங்கவேண்டும். அந்தப் பரிந்துரையிலுங்கூட தவறான பேச்சுகள் இடம் பெறக்கூடாது' எனும் நிபந்தனையின் அடிப்படையில்தான் அனுமதி கிடைக்கும். அதுமட்டுமல்ல, இவ்வுலகில் சத்தியவாக்கை ஏற்றுக் கொண்டிருந்தும் நடைமுறையில் பாவங்களைப் புரிந்தவர்களுக்குத்தான் இந்தப் பரிந்துரைக்கான அனுமதி வழங்கப்படுமே தவிர, இறை துரோகிகளும், சத்தியத்தை நிராகரித்தவர்களும் எவ்விதப் பரிந்துரைக்கும் தகுதியுள்ளவராக மாட்டார்கள்.

இந்த அத்தியாயம் ஓர் எச்சரிக்கையுடன் முடிகின்றது. எந்த நாள் வரப்போவதாக செய்தி அறிவிக்கப்படுகின்றதோ, அந்த நாள் வரப் போவது உண்மையே! அதனைத் தொலைவில் இருப்பதாகக் கருதாதீர்கள் அது மிக விரைவில் வர இருக்கின்றது. இன்று அதனைப் பிடிவாதமாக மறுத்துக் கொண்டிருப்பவன், நாளை மனம் வருந்தி 'அந்தோ, உலகில் நான் பிறக்காமலே இருந்திருக்கக் கூடாதா?' என்று புலம்புவான். இன்று அவன் எந்த உலக மோகத்தில் மூழ்கியிருக்கின்றானோ அதே உலகத்தைக் குறித்துத்தான் அப்பொழுது அத்தகைய உணர்வுகளை அவன் வெளிப்படுத்துவான்.

வசனங்கள் மற்றும் தெளிவுரை அடுத்த இதழில் ...

இறைவன் நாடினால்..!

பின்பற்றுவதற்கு தகுதியானவர் யார்?

உர்தூ மூலம்
மௌலானா அப்துல் க.்.பார் ரஹ்மானி

தமிழாக்கம்
மௌலவி அ.குத்புதீன் அஹ்மத் பாகவி
மௌலவி ஏ.ஜே. மஸ்தான் அலீ பாகவி, உமரி



தூதுத்துவத்தின் மீது நம்பிக்கை

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: "எவனுடைய கையில் முஹம்மதின் உயிர் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக, மூஸா (அலை) அவர்கள் உங்கள் முன் வந்துவிட்டால் நீங்கள் அவரைப் பின்பற்றி என்னைக் கைவிட்டுவிட்டால் நீங்கள் நேர்வழியிலிருந்து பிறழ்ந்து விடுவீர்கள். மூஸா (அலை) அவர்கள் உயிருடன் இருந்து என் தூதுத்துவ காலத்தை அடைந்திருந்தால் அவர்களும் என்னையே பினபற்றியிருப்பார்கள்."

மற்றுமொரு அறிவிப்பில் "என்னைப் பின்பற்றுவதைவிட அவருக்கு வேறுவழி இருந்திருக்காது"எனும் சொற்றொடர் இடம் பெற்றுள்ளது.

அறிவிப்பாளர்: *ஜாபிர் (ரலி)*

ஆதாரம்: *தாரமி, முஸ்னத் அஹ்மத், மிஷ்காத்*

அண்ணலாரைப் பின்பற்றுதல்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நான் கொண்டு வந்துள்ள ஷரீஅத்திற்கு உங்கள் விருப்பங்கள் கீழ்ப்படியாத வரையில் எவரும் இறை நம்பிக்கையாளராக விளங்கிடமுடியாது.

அறிவிப்பாளர்: *அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி)*

ஆதாரம்: *மிஷ்காத்*

அண்ணலாரை நேசித்தல்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: "உங்கள் தந்தை மற்றும் இதர மக்களை விட நான் உங்களுக்குப் பிரியமானவனாக ஆகாதவரை உங்களில் எவரும் (ஈமான்) நம்பிக்கை கொண்டவராகத் திகழ முடியாது."

அறிவிப்பாளர்: *அனஸ் (ரலி)*

ஆதாரம்: *மிஷ்காத், கிதாபுல் ஈமான்*

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு சிறுவனுக்கு அறிவுரை கூறினார்கள்: 'என் மகனே! உன்னால் முடிந்தால் காலையிலிருந்து மாலை வரை உன் உள்ளத்தில் யாரைப் பற்றியும் அருவெறுப்பில்லாமல் வாழ்ந்திடு!'
பின்னர் கூறினார்கள்: என் அன்புச் சிறுவனே! இது (இவ்வாறு நேசம் கொள்வது) என்னுடைய வழிமுறையாகும். எவன் என் வழிமுறையை நேசிக்கின்றானோ அவன் என்னை நேசிக்கின்றான். எவன் என்னை நேசிக்கின்றானோ, அவன் சுவனத்தில் என்னுடன் இருப்பான்!"

அறிவிப்பாளர்: *அனஸ் (ரலி)*

ஆதாரம்: *திர்மிதி, மிஷ்காத்*

அடுத்த இதழில் தொடரும், இறைவன் நாடினால்..!

ஹஜ் பெருவிழா..!



ஹஜ் புறப்பாடு



புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய சகோதர-சகோதரிகளைக் கொண்டு, 1428 வருடத்துக்கான IPC ஹஜ் பயண குழு தனது புனிதப் பயணத்தை மேற்கொண்டு

புதிய சகோதரிகள்



இறையருளால் நலமுடன் குவைத் திரும்பியது. IPC ∴பஹாஹீல் கிளை தமிழ்ப்பிரிவு சகோதரர் என்.எம். எம். ஹுஸைன் அவர்கள் தமிழ்க்குழுவை வழிநடத்திச் சென்றார். புனிதக் கடமையை

அனுபவங்கள்



நிறைவேற்றிய பூரண திருப்தியுடன் சகோதர-சகோதரிகள் தமது மகிழ்ச்சியையும் IPC-க்கு நன்றியையும் தெரிவித்துக் கொண்டனர். தங்கள் வாழ்வின் மிக முக்கிய நிகழ்வான இந்த இறைக்கடமையை நிறைவேற்றியதன் அனுபவங்கள் தங்கள் உணர்வுகள் ஆகியவற்றை அவர்கள் பதிவு செய்தனர்.

தமிழ்ச் சகோதரர்கள்

150-க்கும் மேற்பட்ட சகோதர-சகோதரிகள் பங்கு பெற்ற இந்த புனிதப் பயணத்துக்கு IPC ∴பஹாஹீல் கிளை மேலாளர் அஷ்ஷெய்க் முனீ∴ப் அப்துல்லாஹ்-அல்-ஆஸ்மி தலைமை வகித்தார்.

தகவல்: இளவேனில்



படங்கள்:

மஹ்மூத் பக்கர்
உமர்
நஜீப்

கிரிக்கெட் போட்டி





IPC ∴பஹாஹீல் கிளை சார்பாக, இந்திய மற்றும் இலங்கையைச் சேர்ந்த சகோதரர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. குறிப்பிட்ட ஓவர்களுக்கான இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ∴பஹாஹீல் கிளை மேலாளர் அஷ்ஷெய்க் முனீ∴ப் அப்துல்லாஹ்-அல்-ஆஸ்மி பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். மக்களிடையே பரஸ்பரம் நல்லுறவை வளர்க்கும் விதத்தில் IPC இதுபோன்ற போட்டிகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

தகவல்: அபூ அஷ்பாக்

திருக் குர்ஆன் மனனப் போட்டி



IPC சார்பாக, அரபியரல்லாத முஸ்லிம்கள் மற்றும் புதிதாக, இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கான திருக் குர்ஆன் மனனப்போட்டி ஜனவரி 10, 11 தேதிகளில் IPC தலைமையகத்தில் நடைபெற்றது. 6 வயது மழலையர் முதல் 50 வயது பெரியவர் வரை நூற்றுக்கணக்கான மக்கள் இதில் கலந்துகொண்டு இறைவேதத்தை தமது இனிய குரலில் ஓதினர். பெண்களுக்கான போட்டி IPC (ரவ்தா) பெண்கள் கிளையில் நடைபெற்றது.

IPC தலைமையக அழைப்புப்பணித் துறைப்பிரிவு தலைவர் அஷ்ஷெய்க் அப்துல் அஜீஸ்-அல்-ஷம்மரி தலைமையில், தலைமையக அழைப்புப் பணி சகோதரர்கள் ஸ∴பாத் ஆலம் (ஹிந்தி), கரமுல்லாஹ் மன்ஸூர் (நேபாளி), அப்துல் முஸவ்விர் (தமிழ்), ∴பைஸல் முஹம்மத் (சிங்களம்), காஜா நஜீபுத்தீன் (தெலுகு), ஜாகிர் ஹுஸைன் (மலையாளம்) ஆகியோர் ஏற்பாடுகளைச் சிறப்பாக செய்திருந்தனர்.

பல்வேறு பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான மொத்த பரிசுத்தொகை KD 4800 அதற்கான பிரத்யேக விழாவில் வழங்கப்படும்.

தலைமையகத்திலிருந்து இளவேனில்



இந்திய குடியரசு தின விழா!

58-ஆவது இந்திய குடியரசு தினமான 26.01.2008 சனிக்கிழமை அன்று குவைத் இந்திய தூதரகத்தில் விமரிசையாக நடைபெற்றது.

குவைத்துக்கான இந்தியத் தூதரான திரு. கணபதி அவர்கள் இந்திய தேசியக்கொடியை ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

மழலையர் கூட்டம் தேசிய கீதத்தை இசைத்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

நிகழ்ச்சியில், IPC சார்பாக, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அழைப்புப்பணி சகோதரர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

தகவல்: நஜீப்







ஸல்மான்



கவிதை

துன்பம் நீங்க...!

சுதந்தரம் அடைந்துவிட்டோம்,
சுமைகளும் குறைந்துவிட்டதென்றோம்!
ஆட்சிகள் பலவும் மாற்றிவிட்டோம்,
ஆண்டுகள் அறுபதைக் கடந்துவிட்டோம்!
வளங்கள் நிறைந்த நாட்டினிலே,
வறுமைகள் இன்னும் ஒழியலையே!

கல்வியும் முழுமை பெறலையே,
பஞ்சமும் பசியும் தீரலையே!
ஊழலும் இங்கு மலிந்துபோனதே,
உணவுப்பஞ்சமும் வந்துவிட்டதே!
ஆறுகள் எல்லாம் வறண்டுபோனதே,
விவசாயமும் அழிந்து வருகிறதே!

இலவசம் என்று அறிவிக்கின்றோம்,
இயலாமையை நம்முள் விதைக்கின்றோம்!
திட்டங்கள் பலவும் தீட்டிவைத்தோம்,
தீபத்தை ஏற்ற மறுத்துவிட்டோம்!
வேலைக்கு உணவை அறிவித்தோம்,
உயிருக்கு வேள்வி வளர்த்துவிட்டோம்!

கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டோம்,
கோடியாய் சேர்த்து நன்றிமறந்தோம்!
கடனை இவனுக்கு சேர்த்துவிட்டோம்,
காலங்காலமாய் சுரண்டபழகினோம்!
சரித்திரம் மாற்ற மறந்துவிட்டோம்,
ஓட்(டு)டையில் மீண்டும் விழுந்துவிட்டோம்!

நம்மில் வந்த நாயகம்நபியை,
நமது தலைவராக ஏற்றுப்பார்!
அவர்தம் காட்டிய பாதையில் நடந்துபார்,
அவனியனைத்தும் நம் காலடிகீழ் பார்!
கைமேல் பலனும் கிடைக்கும்பார்,
பாரிலிருந்து துன்பம் ஓடிடும்பார்!

சில மாதங்களுக்கு முன்னர் இஸ்லாத்தைத் தன் வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொண்ட இந்த தமிழக சகோதரர் நடராஜன் என்ற ஸல்மான் கவிதை உலகுக்கு புது வரவு!

சமுதாய அவலங்களை தோலுரித்துக் காட்டும் சாதாரண மனிதனின் உள்ளக் குமுறலே இவருடைய கவிதைகள்!

கவிதைப் பூங்காவில் புதுவசந்தமாய் காலடி எடுத்து வைத்திருக்கும் இந்த இளந்தென்றல் சுகவாசம்வீச வாழ்த்துகின்றோம்!
(ஆ-ர்)



முஸ்லிம் பெண் படித்தரங்கள்: 5

இறையச்சமா..? இனிய கணவனா..?

தமக்கு விருப்பமில்லாத ஆணை மணக்கச் செய்து அதன் மூலம் பெண்கள் மீது ஒரு பெரும் பாரம் சுமத்தப்படுவதை எந்தவிதத்திலும் இஸ்லாம் விரும்புவதில்லை. ஏனெனில், தோற்றம், செயல்கள், மனஓர்மை, ஈர்ப்பு ஆகிய அனைத்து விஷயங்களிலும் தம்பதியரிடையே நட்புக் கொள்ளக்கூடிய வகையிலான பந்தத்தை நிலைநிறுத்தவே இஸ்லாம் விரும்புகிறது. இதில் ஏற்படும் அலட்சியம், புறக்கணிப்பு ஏதேனும் ஒரு சாரார் மீது, குறிப்பாக பெண் தரப்பில் தமது வாழ்க்கைத் துணையை மனதார நேசிக்க முடியவில்லையே எனும் உணர்வை ஏற்படுத்தக் கூடும். இந்த நிலையில் தனது கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுமோ என்று அவள் அஞ்சக்கூடும். இறுதி முடிவாக தான் நேசிக்க முடியாத கணவனிடமிருந்து விவாக விலக்கு கோரும் நிலைக்கு தன்னைத் தானே அவள் தள்ள நேரிடும்.



இத்தகைய நிலை ஏற்படுவதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள விரும்பிய தாபித் பின் கைஸ் இப்னு ஷம்மாஸ் (ரலி) அவர்களின் துணைவியாராகிய ஜமீலா (ரலி) அவர்களின் வாழ்க்கையை இதற்கு உதாரணமாகக் கூறலாம்! அதன் சுருக்கம் இதுவே:-

அப்துல்லாஹ் இப்னு உபை (ரலி) - இன் சகோதரியாகிய அந்த நங்கை, அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களின் திருச்சமூகத்திற்கு வருகை தந்து இவ்வாறு கூறினார்: "அல்லாஹ்வின் தூதரே! தாபித் பின் கைஸ் அவர்களின் மார்க்கப்பற்று மற்றும் அவருடைய செயல்கள் குறித்து எனக்கு எவ்வித மனவருத்தமோ, ஆட்சேபணையோ இல்லை! எனினும், நான் ஒரு முஸ்லிமாக இருக்கும்பட்சத்தில் இறைநிராகரிப்புக்குரிய செயல் ஏதேனும் செய்து விடுவதை வெறுக்கிறேன்!"

(இருவரையும் சேர்த்து வைப்பதற்கான முயற்சிகள் பலன் தராத நிலையில்) அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அவருடைய தோட்டத்தை அவருக்குத் திருப்பித் தந்துவிடுகிறாயா?" – ஜமீலா (ரலி) அவர்களின் மஹ்ர் (திருமணத்திற்காக ஒரு முஸ்லிம் ஆண் தான் மணமுடிக்கப்போகும் முஸ்லிம் பெண்ணுக்கு தரும் வாழ்க்கை ஒப்பந்த தொகை) ஒரு தோட்டமாக இருந்தது!

அவர் பதிலளித்தார்: "ஆம்!"

எனவே, இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தாபித் (ரலி) – க்கு செய்தி அனுப்பினார்கள்: "உமது தோட்டத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு அவருக்கு (ஜமீலாவுக்கு) விவாக விலக்குக்கான தவணை வழங்குவாயாக!" –(இது குறித்த மேலதிக விளக்கங்களுக்கு நபிமொழி விளக்க நூல்கள் பார்க்கவும்)அதாவது, முதல் 'தலாக்' – விவாக விலக்கு கூறுவாயாக!*

நபிமொழி நூலான புகாரி - இல் வரும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் அறிவிப்பின்படி, அவர் (ஜமீலா) கூறினார்: "தாபித் பின் கைஸ் அவர்களின் மார்க்கப்பற்று மற்றும் செயல்கள் குறித்து எனக்கு எவ்வித மனவருத்தமும் இல்லை எனினும், நான் அவரை விரும்பவில்லை!" என்று வருகின்றது.

இனி, இஸ்லாமிய மார்க்கத்தின் உன்னத பெருந்தன்மையைப் பாருங்கள்! பெண்கள் மீதான மனித இரக்கம், அவர்தம் பெருமை ஆகியவற்றை அது பாதுகாக்கின்றது. தனது வாழ்வின் பெரும்பகுதியை எவருடன் செலவிட வேண்டுமோ, அத்தகைய துணையைத் தேர்ந்தெடுப்பதில் அவளுடைய விருப்பத்துக்கு மதிப்பளிக்கிறது.

மேற்சொன்ன சம்பவத்திலிருந்து இரு அம்சங்கள் நமக்கு தெளிவாகின்றன: ஒன்று: ஜமீலா (ரலி) அவர்கள் தமது கணவர் தாபித் (ரலி) அவர்களிடத்தில் எந்தக் குறையும் காணவில்லை. இருப்பினும் அவரைப் பிடிக்காத ஒரே காரணத்தால், எங்கே தாம் இறைநிராகரிப்புக்குரிய செயல்களில் ஈடுபட்டுவிடுவோமோ என்று அஞ்சினார்கள். இங்கு அவருடைய வாழ்க்கையைவிட இறையச்சமே மேலோங்கி நின்றது. வாழ்க்கைத் துணைவர் பட்டை தீட்டிய வைரம்தான்! ஆனால், மனம் விரும்பாதபட்சத்தில் அவருடன் வாழ்க்கை நடத்துவது போலியானதாக அமைந்து அதன் காரணமாக இறைநிராகரிப்பின் தேட்டத்துள் தம்மை இழந்துவிடுவோமோ எனும் அச்சம் அவரை முஹம்மத் (ஸல்) அவர்களிடத்தில் முறையிடச் செய்தது.

இரண்டு: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முதலில் அந்தப் பெண்ணைத் தம் கணவருடன் இணைத்து வைக்க முயற்சி செய்தார்கள். ஆனால், எதுவும் பலன் தராதபட்சத்தில், அப்பெண்ணின் இறையச்ச உணர்வுக்கு மதிப்பு தந்து இருவரின் பிரிவுக்கும் ஏற்பாடு செய்யும் வகையில் தாபித் (ரலி) அவர்களிடம் செய்தி அனுப்பினார்கள். அதன் மூலம் அப்பெண் அஞ்சியதுபோல் எதுவும் நடக்காது காத்தார்கள்.

இத்தகைய இறையச்ச பெண்மணிகளே, இஸ்லாமிய மணவாழ்க்கை சாலையின் மைல் கற்களாக விளங்கினார்கள்!

அவரைப் பிடிக்காத ஒரே காரணத்தால், எங்கே தாம் இறைநிராகரிப்புக்குரிய செயல்களில் ஈடுபட்டுவிடுவோமோ என்று அஞ்சினார்கள்!

* ஆதாரம் மற்றும் விரிவான விளக்கங்களுக்கு பார்க்க .ஃபத் - அல் - பாரி, 9/395, கிதாப் அத் - தலாக், பாப் அல்-குல். (அரபி மற்றும் ஆங்கிலம்) ■

தொடர், அடுத்த இதழில் தொடரும், இறைவன் நாடினால்..!

முஹம்மத் ஜாபிர்
ஆய்வு



சென்ற இதழ் தொடர்ச்சி



இறைவன் இருக்கின்றானா..?

தழில் கொஞ்சும் இயற்கை அழகில் நமக்குப் புலப்படும் உண்மை இதுதான்! மாபெரும் படைப்பாற்றலும் ஆக்கத் திறனும் கொண்ட ஓவியன் ஒருவன்தான் இந்த இயற்கை ஓவியத்தை தீட்டியிருக்க முடியும். அவன்தான் அழகு மிளிரும் இந்த கலைப் படைப்புக்களை உருவாக்கியுள்ளான். இவையனைத்தையும் மனித வாழ்வின் பிரத்யேகமான ஒரு குறிக்கோளுக்காகவே படைத்திருக்கின்றான். அவனது இந்த ஆற்றல்தான் அனைத்து ஆற்றல்களிலும் வலிமை மிக்கது! உண்மையான இறைநம்பிக்கையாளர்களும் ஆழ்ந்த சிந்தனை திறனுடையவர்களும் அவனை அடையாளம் கண்டு இறைவன் என அழைக்கின்றார்கள். அவன் மனிதனோ அல்லது படைப்போ அல்ல! ஏனெனில், எந்த மனிதனும் படைப்பும் இன்னொரு மனிதனை ஒரு படைப்பை உருவாக்கிடவோ படைத்திடவோ முடியாது. அவன் விலங்குமல்லன், தாவரமுமல்லன்! சிலையுமல்லன், ஒரு வகை சிற்பமுமல்லன்! ஏனெனில் இவற்றுள் எதற்கும் படைப்பாற்றல் கிடையாது! அவன் கதிரவனும் அலலன், சந்திரனும் அல்லன்! விண்மீனும் அல்லன், கோளும் அல்லன்! ஏனெனில், இவையனைத்துமே பெரியதொரு நிர்வாக அமைப்பினால் கட்டுப்படுத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன.ஒரு பொருளைப் படைப்பவன், அந்த பொருளை விட உயர்ந்தவனாகவும், அதனை விட்டு வேறுபட்டவனாகவும்தான் இருக்க வேண்டும். எனவே எந்தவொரு பொருளும் தானாகவே தோன்றிட முடியாது என்பதை அறிவோம்.

மேலும், இப்பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பொருளையும் படைத்தவன் ஒருவன் இருக்க வேண்டும் என அறிவு கூறுகிறது. வெளிப்படும் புகை ஓரிடத்தில் நெருப்பு இருப்பதையும், காலடிச் சுவடுகள் அங்கு ஒருவர் சென்றிருப்பதையும் அறிவிப்பது போல இப்பிரபஞ்சம், படைத்தவனின் வல்லமையையும் அவனின் தனித் தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. இந்த அகிலத்தின் திட்டமிட்ட அமைப்பு, ஒழுங்கான இயக்கம், இணக்கமான செயற்பாடு, எண்ணற்ற அதன் நன்மைகள் இவை அனைத்தும் படைத்தவன் ஒருவன் இருக்கின்றான் என்பதை உணாத்துகின்றன.

எனவே, இந்த உலகை படைத்தவன், பாதுகாத்துக் கொண்டிருப்பவன் என்பனவும் ஒருவனையே குறிக்கின்றன. இந்த ஆற்றல் இயற்கையில் மிளிரும் வலுவான சக்தி ஆகிய அனைத்துமே அவன் ஒருவனைத்தான் குறிக்கின்றன. அவனைத்தான் அல்லாஹ் எனவும் இறைவன் எனவும் அழைக்கின்றோம். அந்த சக்திதான் எல்லா இரகசியங்களுக்கும் பரம இரகசியமாகும். அவன்தான் பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்தையும்விட உயர்ந்தவன்.

எனவே இப்பிரம்மாண்டமான அகிலத்தைப் படைத்தவனும் மாபெரும் படைப்பாளியாகவே இருக்க முடியும். இச்சின்னஞ்சிறு மனிதனின் பார்வைக்கு அவன் தென்பட வேண்டுமென்பது அவசியமில்லை. அப்படியே ஒரு சிலர் இறைவனை ஏற்றுக்கொள்கின்றனர், ஒரு சிலர் இறைவனை நிராகரிக்கின்றனர் என வைத்துக்கொள்வோம். ஆனால் இரு சாராருமே இறப்பது நிச்சயம். மரணத்திற்குப்பின் இறைவனோ, மறுவாழ்வோ இல்லையென்றால் யாருக்கும் எந்த விதமான இலாபமோ நஷ்டமோ இல்லை. ஆனால் இதற்கு மாறாக, மரணத்திற்குப் பின் இறைவன் இருந்து விட்டால் ஏற்றுக்கொண்டவர்கள் இலாபத்தையும் மறுத்தவர்கள் நஷ்டத்தையும் சந்தித்தேயாக வேண்டும் என்பது உறுதி.

ஆக, இறைவன் இருக்கின்றான் அவன்தான் அல்லாஹ் என ஏற்றுக்கொள்வதே பகுத்தறிவின் ஒப்பற்ற முடிவாகும். இறைவன் அல்லாஹ் இருப்பதாக மனிதன் ஏற்றுக்கொண்டபின் அவன் இறைவனின் பண்புகளையெல்லாம் அறிந்து கொள்ளவேண்டும். பொதுவாகக் கூறினால், ஒவ்வொரு பொதுவான குணமும்,முழுக்க முழுக்க நன்மையாக விளங்கும் ஒவ்வொரு விஷயமும் அவனுக்கே உரியதாகும். அவன் எந்தக் குறைபாடும் களங்கமும், மாசு மருவும் இல்லாதவன் ஆவான். குறிப்பாக உண்மை வேதமான திருக்குர்ஆன் இறைவனின் கருத்துக்களை அறிவுறுத்துகின்றது. அவற்றைப் பின்வரும் வசனங்களில் புரிந்துகொள்ளலாம். தான் எப்படிப்பட்டவன் என்பதற்கு மிக அழகாக இறைவனே கூறுகிறான். இறைமைக்கு இதைவித சிறந்த வரையறையை வேறு எவரால் தரமுடியும். அந்த இறைவனை எந்த பெயரால் அழைப்பது?

இறைவனே கூறுகின்றான்:

கூறுவீராக! அவன் அல்லாஹ், ஏகன், அல்லாஹ் எவரிடத்திலும் எத்தேவையுமில்லாதவன். அனைவரும் அவனிடத்தில் தேவையுடையவர்களே! அவன் யாருடைய சந்ததியும் இல்லை. அவனுக்கு யாரும் சந்ததி இல்லை. மேலும் அவனுக்கு நிகரானவர் எவருமே இலர்.

-திருக்குர்ஆன் ॥2 : 1-4 ■

சாதீயக் கொடுமைகள் நீங்க இஸ்லாம்!

- விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தர் ஒரு உண்மையான ஆன்மிகவாதி. உலகின் அனைத்து மதங்களின் உன்னதங்களையும், போற்றிப் பாராட்டியவர். விவேகானந்தர் இஸ்லாம் மதம் குறித்து மிக உயரிய எண்ணம் கொண்டிருந்தார்.

அவர் கூறினார்: 'சமத்துவத்தைப் பற்றி ஏதேனும் ஒரு மதம் பாராட்டத்தக்க முறையில் சொல்லியிருந்தால் அது இஸ்லாம் மட்டுமே என்பது தான் எனது அனுபவம்.'" முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், கம்யூனிஸ்டுகள் ஆகிய மூவரும் தான் எங்கள் பிரதான எதிரிகள் என்று கூறுவோர் விவேகானந்தர் பெயரை உச்சரிக்கக் கூட தகுதியற்றவர்கள் என்பதை இதன் மூலம் உணரலாம்.

இஸ்லாமிய மன்னர்கள் இந்துக்களைச் சித்ரவதை செய்து பலவந்தமாக மதம் மாற்றினர் என்ற பொய்யை வாய் வலிக்காமல் சொல்லி வருவோர் சற்று அவருடைய பேச்சைக் கேட்கட்டும்: "பாமர மக்களுக்கு இஸ்லாம் ஒரு செய்தியாக வந்தது. முதல் செய்தி சமத்துவம், ஒரே மதம் தான் உள்ளது.., அது அன்பு, வம்சம், நிறம்.. அல்லது வேறு எதுபற்றியும் எந்தக் கேள்வியும் கிடையாது"" என்று கூறினார்.

சாதீயக் கொடுமைகளின் வெப்பம் தாங்காமல் தான் பெரும்பாலான மக்கள் இஸ்லாமியர்களாக மதம் மாறினார்கள் என்பதை விவேகானந்தர் இதயப்பூர்வமாக ஒப்புக் கொண்டிருக்கிறார் என்பதையே இது காட்டுகின்றது.கேரள மாநிலம் மலபார் பகுதியைச் சேர்ந்த ஏராளமான தலித் மக்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவினார்கள். இதைக் கண்ட மேல்சாதியினர் சிலர் எதிர்ப்பு கிளப்பிய போது விவேகானந்தர் அவர்களுக்கு அமைதியாகப் பதில் சொன்னார்..,

"மலபார் பகுதியில் நடந்தது என்ன? ஏழை, எளிய தாழ்த்தப்பட்டவர்கள் உயர் ஜாதி இந்துக்கள் வசிக்கும் தெருக்களின் வழியாக நடக்கக் கூட முடியவில்லை. அவர்களது வீடுகள் அகதிகள் முகாம்களைப் போல ஊரிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கோயில்களுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் விழுந்தால் கூட நீங்கள் கவலைப்பட மாட்டீர்கள். இவ்வளவுக்கும் காரணம் உங்களது கேடுகெட்ட ஜாதி முறைதான். அவர்கள்... இஸ்லாத்தைத் தழுவி ஒரு முஸ்லிம் பெயரைச் சூட்டிக் கொண்டாலோ அவர்களுக்குப் புதிய மரியாதை கிடைக்கிறது. நிலைமை இப்படி இருக்கும் போது, நீங்கள் எதிர்த்துப் போராட வேண்டியது உங்கள் மதத்தினுடைய பழமையான பழக்க வழக்கங்களையும், ஜாதி முறையையும் தானே தவிர நிச்சயமாக முஸ்லிம்களை எதிர்த்து அல்ல.!"

இதுவல்லவா தெளிவான சிந்தனை! தீர்க்கமான அறிவு..! நோயின் மூலத்தைக் கண்டறிந்து அதற்கு சிகிச்சை செய்ய வேண்டும் என்று விரும்பியவர் சுவாமி விவேகானந்தர், அவர் மேலும் பேசுகிறார்: 'இந்தியாவை முகமதியர்கள் வென்றது ஏழை எளியவர்களுக்கு ஒரு விடுதலை வாய்ப்பாக அமைந்தது. எனவே தான் நமது மக்களின் ஐந்தில் ஒரு பகுதியினர் முகமதியர்களானார்கள்" இன்றுள்ள நிலைமைகளுக்கு விவேகானந்தர் அன்றைக்கே அளித்துள்ள தெளிவான விடை இது!

பசுக்கள் புனிதமானது. ஆனால் 'இஸ்லாமியர்கள் பசு மாமிசத்தைப் புசிக்கிறார்கள். எனவே அவர்கள் நமது எதிரிகள்" என்று சிலர் கூறி வந்தனர். கடந்த சில ஆண்டுகளுக்கு முனனர், அரியானா மாநிலத்தில் இறந்து போன பசுமாட்டின் தோலை உரித்ததற்காக ஐந்து தலித்துக்கள் அடித்துக் கொல்லப்பட்ட கொடுமை நடந்தேறியுள்ளது. 'இறந்து போன பசுமாடு, உயிருள்ள தலித்துகளை விட புனிதமானது..?" என்று கூறுகிறார் ஒருவர்! ஆனால் விவேகானந்தர் பார்வை வித்தியாசமானது.

ஒருமுறை பசுபாதுகாப்பு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சுவாமி விவேகானந்தரைச் சந்திக்க வந்தார்கள். இந்து மதத்தின் புனித சின்னமான பசுக்களை பாதுகாக்க உங்களால் இயன்ற நன்கொடையைத் தாருங்கள்..! என்று வந்தவர்கள் கேட்டார்கள்.

அப்பொழுது நாட்டின் பல பகுதிகளில் பஞ்சம் தலைவிரித்தாடியது. மக்கள் பட்டினியால் சுருண்டு விடுந்து செத்துக் கொண்டிருந்தார்கள். சுவாமிஜி வந்தவர்களைப் பார்த்துக் கேட்டார்:

'பட்டினியால் சாகும் மனிதர்களைக் காப்பாற்ற நீங்கள் ஏதாவது செய்வீர்களா?'

வந்தவர்கள் பதில் சொல்லும் போது "மனிதர்கள்





பட்டினியால் சாவது அவர்களது கர்மப்பலன். அவர்களை நாங்கள் காப்பாற்ற முடியாது, பசுக்களைக் காப்பாற்றுவது தான் எங்கள் கடமை" என்றார்கள். வெகுண்டெழுந்த விவேகானந்தர் அவர்களைப் பார்த்துச் சொன்னார். 'மனிதர்கள் பட்டினியால் சாவது அவர்களது கர்மப் பலன் என்றால், பசுக்கள் சாவதும் அதன் கர்மப்பலனாகத் தான் இருக்க வேண்டும். மனிதர்களைப் பற்றிக் கவலைப்படாத உங்களுக்கு பசுக்களைப் பற்றிப் பேச என்ன உரிமை இருக்கிறது" என்று கூறி அவர்களைத் திருப்பி அனுப்பி விட்டார்.

அமெரிக்காவில் நடந்த உலக சமய மாநாட்டில் 'சகோதர, சகோதரிகளே..!"" என்று அவர் அழைத்தது வெறும் உதட்டு வார்த்தை அல்ல. உள்ளத்தில் இருந்து வந்த உண்மை வார்த்தை ஆகும். விவேகானந்தரின் ஆன்ம உள்ளம் கண்ட கனவு வேறு.இந்தியா என்ற மதச்சார்பற்ற நாடு அனைத்து மதங்களையும் பண்பாட்டையும், இனங்களையும், மொழிகளையும் கொண்ட பல வண்ண மலர்த்தோட்டமாக இருக்க வேண்டும் என்பதே விவேகானந்தரின் கனா..!

விவேகானந்தரைப் பொறுத்தவரை இஸ்லாம் என்ற மார்க்கம் சமத்துவம் மற்றும் அன்பு மயமானது. அது ஆக்கிரமிப்பு மதம் அல்ல.

- இஸ்லாமிய வலைதளத்திலிருந்து



சகிப்புத்தன்மையற்றதா இந்த சன்மார்க்கம்?

பொதுவாக, மதங்கள் மனிதனை செம்மைப்படுத்துகின்றன என்பது உலகநோக்கு! அதில் 'இஸ்லாம்" உலகவாழ்க்கை மட்டுமல்ல, மரணத்தக்குப் பின்னுள்ள வாழ்க்கை குறித்தும் பேசி மனிதனை உண்மையான வெற்றியாளராக்குகின்றது.

இந்த வெற்றிக்கு உறுதுணையான ஊடகமாக இறுதிஇறைவேதம் திருக் குர்ஆனும், இறைவன் அதனை யார் மீது அருளினானோ,அவருடைய வாழ்க்கையும் இருக்கின்றன. அவர்தாம் முஹம்மத் (ஸல்) அவர்கள்!

ஒருமுறை அவர்கள் தமது தோழர்களுடன் மக்காவின் கஅபா



புனித ஆலயத்துக்குள் நுழைந்து, அதன் சாவியைப் பெறுவதாகவும் பின்னர் அதனை வலம் வந்து உம்ரா (புனித கஅபா-வை நாடி செல்லும் ஒரு வணக்கம்) நிறைவேற்றுவதாகவும் கனவு கண்டார்கள். (இறைத்தூதர்களுக்கு வரும் கனவும் ஓர் இறைசெய்தியே!) அதன்படி அண்ணலார் (ஸல்) அவர்கள் மதீனாவிலும் சுற்றுப்புறத்திலும் உள்ள முஸ்லிம்களை ஒன்று திரட்டி தம்முடன் புறப்படுமாறு கூறினார்கள். கஸ்வா எனும் தனது ஒட்டகத்துடன் 1500 தோழர்களை ஒன்று திரட்டி மக்கா நோக்கிப் பறப்பட்டர்ரகள்.

உம்ராவிற்காக ஆடை தரித்து போர்த்தடையை அமல்படுத்துவதாக அறிவித்தார்கள். இதன் மூலம், எவரும் தாமாக போருக்கு வந்தாலன்றி வலிய சென்று போர் புரிவது இஸ்லாத்தின் நெறியல்ல என்பதை உணர்த்தினார்கள்.

எனினும், அண்ணலார் (ஸல்) அவர்களின் மக்கா வருகையை அறிந்த அன்னாருடைய எதிரிகளான குறைஷ் மக்கள், அவரைத் தடுக்க நாடி காலித்-பின்-வலீத் தலைமையில் (இவர் பின்னர் இஸ்லாமிய வாழ்க்கையை ஏற்றார்) இருநூறு குதிரை வீரர்களுடன் தயாராக இருந்தனர். ஆனால் இறையுதவி ஒன்றையே துணைக்கோலாகக் கொண்ட முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது பயணத்தைத் தொடர்ந்தார்கள். முஸ்லிம்களுக்கு அருகில் முகாமிட்ட காலித் தொழுகையின்போது அவர்களைத் தாக்க திட்டமிட்டுக் காத்திருந்தார்.

இந்த வேளையில்தான் அச்சமும் பீதியும் கலந்த நேரங்களில் எவ்வாறு தொழ வேண்டும் எனும் சட்டம் இறக்கியருளப்பட்டது. அதாவது முஸ்லிம்களின் ஒரு கூட்டம் தொழுது கொண்டிருக்கும்போது ஒரு கூட்டம் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ளும். இதனால் காலிதின் நோக்கம் நிறைவேறாமற் போனது. தங்களுடைய வழியில் காலிதின் படை நிற்பதைக் கண்ட அண்ணலார் (ஸல்) அவர்கள் மக்கா செல்லும் நேரான பாதையைக் கைவிட்டார்கள். மலைகளுக்கிடையில் கற்களும், பாறைகளும் நிறைந்த கரடுமுரடான பாதை வழியே 'ஸனிய்யதுல் முர்ரார்' எனும் இடத்தை அடைந்தார்கள். அப்போது அண்ணலார் (ஸல்) அவர்களின் வாகனமான 'கஸ்வா' ஒட்டகம் மேற்கொண்டு செல்லாமல் மண்டியிட்டு அமர்ந்துவிட்டது. அப்போது அண்ணலார்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'எனது ஒட்டகம் 'கஸ்வா' முரண்டு பிடிப்பதில்லை; அது அத்தகைய குணமுடையதுமல்ல! எனினும் 'யானைப்படைகளைத்' தடுத்த அல்லாஹ் இதனையும் தடுத்துவிட்டான். எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக! அல்லாஹ் மேன்மை யாக்கியவற்றைக் கண்ணியப்படுத்தும் வகையில் குறைஷியர் என்னிடம் எந்தவொரு திட்டத்தைக் கோரினாலும் அதனை நிறைவேற்றிக் கொடுப்பேன்" என அறிவித்தார்கள்.

இதன் மூலம் இறைக்கட்டளையையும் தூக்கிப் பிடித்தார்கள். அதேவேளை, சண்டை-சச்சரவுக்கு வழிகோலாமல் சகிப்புத் தன்மையுடன் இஸ்லாமியக்கொடியைத் தாங்கிப் பிடித்தார்கள்!திருக் குர்ஆனும் சகிப்புத்தன்மை குறித்து இவ்வாறு பேசுகின்றது:

தீன்-இறைமார்க்கம் தொடர்பான விஷயங்களில் எவர்கள் உங்களுடன்- போர் புரியவில்லையோ, உங்களை உங்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற்றவில்லையோ, அவர்களிடம் நீங்கள் நல்லவிதமாகவும், நீதியுடனும் நடப்பதிலிருந்து அல்லாஹ் உங்களைத் தடுப்பதில்லை.

திருக்குர்ஆன் 60:8

இவரல்லோ

இன்றைய உலகம் முழுவதும் அரசியல் துறை ஒரு ஆற்றல் மிகுந்த துறையாக இருக்கிறது. ஆழ்ந்து நோக்கின் முழு உலகமும் பின்பற்றுகின்ற வழி முறை முஹம்மது (ஸல்) அவர்களது அரசியல் வாழ்விலிந்து பெறப்பட்டதே என்பது புலப்படும். எனவே இவ்வுலகத்திற்கு அருட்கொடையாக அண்ணலார் (ஸல்) அவர்கள் வருகை தந்தது ஒரு சில வணக்க வழிபாடுகள் சார்ந்த வாழ்வை முழுமைப்படுத்துவதற்காக மட்டுமே அல்ல!

மாறாக, அன்னாரது தொண்டு தெளிவானது, தொலைநோக்குப்பார்வை கொண்டு மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டும் நெறியாக இஸ்லாத்தை முன்னிறுத்தி அதனை செயற்படுத்துவதற்கான ஒரு ஆக்கபூர்வ முறையை உருவாக்குகின்ற தெளிவான இலக்கோடுதான் இவ்வுலகில் தனது இஸ்லாமிய அழைப்புப்பணியை ஆரம்பித்தார்கள், அண்ணலார் (ஸல்) அவர்கள்!

தான் தூதராக அனுப்பி வைக்கப்பட்டதற்கான நோக்கத்தை நிறைவு செய்வற்காக இரவு பகலாக உழைத்ததோடு இந்த அழகிய நெறியை ஏற்றுக்கொள்ளாதவர்களைப் பற்றி கவலைப்பட்டார்கள்! அண்ணலார் (ஸல்) அவர்களின் இத்தகைய பொறுப்புணர்வைக் கண்டு இறைவனே இவ்வாறு அவர்களை குறிப்பிடுகின்றான்:

நபியே! அவர்கள் இவ்வறிவுரையை கேட்டு ஈமான் கொள்ளவில்லையானால் அவர்கள் மீது கவலைப்பட்டு உமது உயிரை மாய்த்துக்கொள்ளப் பார்க்கின்றீர்களா?

திருக்குர்ஆன் 18:6

உண்மையில் அண்ணலார் (ஸல்) அவர்களின் வாழ்வு சுகபோகங்களையும் ஆடம்பரத்தையும் கொண்டதல்ல! மாறாக, தான் அறிவுறுத்தி வருகின்ற கொள்கை மானுடர் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே இருந்தது. இதற்காக அனைத்து தரப்பினரையும் சந்தித்தார்கள். பெரும் பெரும் தலைவர்களையும் அடிமைகளையும் சந்தித்தார்கள். நாட்டு மன்னர்களுக்கு கடிதம் மூலம்



ஆட்சியாளர்..!

தூதுச் செய்தியை பரப்பினார்கள்.இந்த அழைப்புப்பணிக்காக மதீனத்து பொன் பூமியை பயன் படுத்தினார்கள். மற்றும் சில வேளைகளில் ஒப்பந்தங்கள் செய்தார்கள். இறுதியில் மதீனாவில் மஸ்ஜிதுன் நபவியில் தமது அழைப்புப்பணியை இவ்வாறு பட்டியலிட்டுக் கொண்டார்கள்:

(1)திருக் குர்ஆனை கற்றுக் கொடுக்கும் பணி,
2)உளத்தூய்மை செய்யும் பணி
(3)தமது வழி முறையை தெளிவாக உணர்த்தும் பணி

உலகப் பிரதிபலன் எதிர்பார்க்காத இந்த மாபெரும் சேவைக்கு அல்லாஹ் தனது வேதமான திருக் குர்ஆனில் இவ்வாறு மகுடம் சூட்டுகிறான்:

நான் இப்பணிக்காக உங்களிடம் எந்த கூலியையும் கேட்கவில்லை. எனக்குரிய கூலியோ அகிலங்களின் அதிபதியிடமே உள்ளது. (26:127)

பாருங்கள்! என்னே இறைவனின் அற்புதம்!!எழுத ப்படிக்கத்தெரியாத ஒருவரை மாபெரும் ஒரு சமூகத்திற்கு, ஏன் உலகம் முழுவதற்கும் ஓர் அருட்கொடையாக, ஓர் முன்மாதிரியாக அனுப்பிவைத்தான்! பெரும் பெரும் அறிஞர்களும் தத்துவவாதிகளும் கொள்கைவாதிகளும் சாதித்திராத மாபெரும் சாதனை இது!

அதனால்தான், முஸ்லிம் அல்லாத ஒருவர், தன்னுடைய உலகின் சிறந்த 100 தலைவர்கள் பட்டியலில் எம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முதலிடம் தரவேண்டி வந்தது.

அண்ணலார் (ஸல்) அவர்களின் இந்த கடும் உழைப்பு அவருக்கு மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் ஈட்டித்தந்திருக்க முடியும். இறை உழைப்பே அவர்தம் நோக்கமாக இருந்ததால், தமது வசதிகள் குறித்து அவர் கவலைப்படவில்லை. இன்றைய காலகட்டத்தில் ஒரு ஆட்சி கவிழ்ந்து இன்னொரு கட்சி ஆட்சி கட்டிலில் அமர்ந்தால் போதும். முன்னர் ஆட்சி புரிந்தவர்மீது முதலில் விசாரணைக் கமிஷன் அமைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள்.

ஆனால் இந்த நாயகனைப் பாருங்கள்!

தன்னை பிறந்த மண்ணிலிருந்து வெளியேற்றிய மக்கத்து மக்களை வெற்றிகொண்ட பிறகு அவர் முதலில் அறிவித்தது இதனைத்தான்:-

முன்னர் தாம் அந்நகரிலிருந்து வெளியேறக் காரணமாகி சொல்லொண்ணா துயர்கள் புரிந்த எவரையும் பழிவாங்கப்படமாட்டாது!

தான் பயிற்றுவித்த தனது தோழர்களை அனைத்து துறைகளிலும் சிறப்புற செய்தார்கள். இதன் விளைவாக இராணுவ வீரர்கள், நபிமொழி கலை அறிஞர்கள், சட்டத்துறை வல்லுநர்கள், பொருளாதார நிபுணர்கள், வரவாற்றாசிரியர்கள் என அனைத்துத்துறை சார்ந்த பேரறிஞர்கள் உருவானார்கள்.

எனவே, அண்ணலார் (ஸல்) அவர்கள் உலகம் கருதுவது போன்று ஓர் ஆனமிகவாதி மட்டுமல்ல அவர் ஒரு சிறந்த ஆசான், படைத்தளபதி, சட்டமேதை, குடும்பத் தலைவர், நற்குண சீலர், சிறந்த நிர்வாகி, நம்பிக்கையான வியாபாரி, தலை சிறந்த இஸ்லாமிய அழைப்பாளர் என அனைத்து துறை சார்ந்த பண்புகளுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்து இவ்வுலகில் இஸ்லாத்தை முழுமைப்படுத்தினார்கள். பின்பறறப்படவேண்டிய ஒரு சிறந்த ஆட்சியாளர் தாம்தான் என்பதை வரக்கூடிய சமூகத்திற்கு எடுத்துக் காட்டினார்கள்.

அவருடைய வாழ்வு இந்த உலகத்தையே மாற்றியமைத்தது! உலகத்தில் இஸ்லாத்தை மிகைத்து வேறு எந்தக் கொள்கையாலும் நிலைத்திருக்க முடியாது என்பதை தெளிவாக எடுத்துக் காட்டியது.

பின்பறறப்பட வேண்டிய ஒரு சிறந்த ஆட்சியாளர் தாம்தான் என்பதை வருங்கால சமூகத்திற்கு எடுத்துக்காட்டினார்கள். இதுபோன்ற ஒரு ஆட்சியாளரை வரலாறு கண்டதில்லை, இனி காணப் போவதுமில்லை!

■



என்னை நீங்கள் நினைவுகூருங்கள்..!
நானும் உங்களை நினைவு கூருகின்றேன்..!!

ஒரு ஊரில் நல்ல மனம் படைத்த கோடீஸ்வரன் இருந்தான். ஆவ்வூரீல் வாழ்ந்த 3 பிச்சைக்காரர்கள் உதவி கேட்டு அவனிடம் சென்றனர்.

முதல் பிச்சைக்காரன்,'அன்பானவரே! எனக்கு ஐம்பது ரூபாய் தாருங்கள்!" என்றான். அதற்கு கோடீஸ்வரன்,' என்ன உனக்கு ஐம்பது ரூபாய் வேண்டுமா? இதோ, பத்து ரூபாய்! உனக்கு இதுபோதும்!"

இரண்டாவது பிச்சைக்காரன், 'தயாள குணம் படைத்தவரே! நான் எதுவும் சாப்பிடவில்லை! ஒரு நூறு ரூபாய் தாருங்களேன்!" என்றான்! அதற்கு கோடீஸ்வரன்,'என்ன, ஐம்பது ரூபாயா? இதோ, ஐம்பது ரூபாய், இரண்டு நாட்களுக்கு உனக்கு கவலையில்லை!" என்றான்.

கடைசி பிச்சைக்காரன் வந்தான். அவனுக்கு ஸலாம் கூறியவனாய்,'நல்மனம் படைத்த உம்மைப் பற்றிக் கேள்விப்பட்டு உம்மை சந்திக்க வந்தேன். இப்பூவுலகில் இறைவன் படைத்த ஒரு சில நல்மனிதர்களில் நீரும் ஒருவர். என்னைப் படைத்த இறைவன் உம் மூலமாக எனக்கு வாழ்வாதாரம் வழங்குவான் என நம்புகின்றேன்!" என்றான்.
கோடீஸ்வரன் அவனுடைய அணுகுமுறையைக் கண்ட பரவசமடைந்தவனாய்,' முதலில் அமருங்கள். களைப்புற்றிருக்கின்றீர், என்ன சாப்பிடுகின்றிர்? உமக்கு சேவை செய்ய நாடுகின்றேன்!"

பிச்சைக்காரன் பதிலளித்தான்: 'கருணையாளரே! புகழனைத்தும் இறைவனுக்கே! என் தாகம் தீர்த்தீர்!! விருந்தோம்பலின் உதாரணபுருஷராக இறைவன் உம்மை அனுப்பியிருக்கின்றான். எனக்கு வேறென்ன வேண்டும்? இறைவன் உமக்கும் உம் குடும்பத்தாருக்கும் நல்லருள் பாலிக்கட்டும்!"

கோடீஸ்வரன விடுவதாக இல்லை. அந்த பிச்சைக்காரனை தன்னுடன் தங்க வைத்தான். அவனுக்கு நல்லதொரு இருப்பிட வசதியும் வாழ்வாதாரமும் ஏற்படுத்தித் தந்து வாழ்வின் எஞ்சிய பகுதியை நல்லபடியாகக் கழிக்க உதவினான்.

இந்த கோடீஸ்வரனைப் போன்றவனே, வல்ல இறைவன்! மூன்றுவிதமான மனிதர்கள் தத்தமது பாணியில் வெவ்வேறுவிதமான கோரிக்கைகளுடன் அவனை அணுகுகின்றார்கள்.

முதலாமவன், தற்காலிக உலகியல் விருப்பங்கள், சுயநல கோரிக்கைகளுடன் இறைவனை அணுகுகின்றான். இறைவனும் அவனுடைய கோரிக்கைக்கு செவிசாய்த்தவனாய் ஒரு சில தற்காலிக தேவைகளை அளிக்கின்றான், கோடீஸ்வரன் அந்த பிச்சைக்காரனுக்கு வழங்கிய பத்து ரூபாய் போன்று! அந்த பிச்சைக்காரனும் பொழுது சாய்வதற்கு முன்னரே அதனை செலவழித்து விடுகின்றான். இரண்டாவது வகை மனிதனும் முதலாமவனைவிட சற்று தேர்ந்தவனாய் இறைவனிடம் வேண்டதல் வைக்கின்றான் அந்த இரண்டாவது பிச்சைக்காரனைப் போன்று! இறைவனும் அவனிடம் கோடீஸ்வரன் அந்த பிச்சைக்காரனுக்கு ஐம்பது ரூபாய் வழங்கியது பேன்று ஒரு சிலநாள் தேவைகளுக்கான வாழ்வாதாரம் வழங்குகின்றான்.



ஆனால், மூன்றாவது வகை மனிதனோ, இறைவன் அவனுக்கு வழங்கியவற்றுக்கு நன்றி செலுத்துகின்றான். இறைவனின் புகழ் பாடியவனாய், அவனை என்றும் நினைவுகூர்ந்துகொண்டே இருக்கின்றான், மூன்றாவது பிச்சைக்காரன் இறைபுகழ் பாடியது போன்று! இறைவன் அவனுடைய செயல்களினால் மகிழ்ந்து அவன் எதிர்பாராத நிலையில் அவனுடைய அனைத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றான், அந்த கோடீஸ்வரன் மூன்றாவது பிச்சைக்காரனுக்கு வாழ்வாதாரங்களை வழங்கியது போன்று!

வாழ்க்கைக் கடலின் துன்ப-துயரங்களில் மூழ்கியிருக்கும் ஒவ்வொரு மனிதனும் உலகியல் தேவைகளை மட்டுமே நாடினால், இறைவனும் அவனுக்கு தற்காலிகமான தீர்வுகளைத் தரக்கூடும். ஆனால், இறைவனை என்றும் நினைவுகூர்ந்து, அவன் புகழ் பாடும் மானுடரை இறைவன் என்றும் கைவிடுவதில்லை, அவர்கள் எத்தகைய துன்பக்கடலில் மூழ்கியிருந்தாலும் சரியே!
இறைவன் கூறுகின்றான்:

என்னை நீங்கள் நினைவுகூருங்கள்..! நானும் உங்களை நினைவு கூருகின்றேன்..!! எனக்கு நன்றி செலுத்துங்கள், (என்னுடைய அருட்கொடைகளை மறுத்து) நன்றி கொல்லாதீர்கள்! -திருக்குர்ஆன் 10:85

-எம்

உங்கள் வாழ்வை வளமாக்க..!



ஸையித் அபுல் அ஑லா மௌதூதி



மு. அ. அப்துல் முஸவ்விர்



அபூ ஆஸியா



என்.எம்.எம். ஹுஸைன்

வாசிக்க
மட்டுமல்ல..!
வாழ்க்கைக்கும்..!!



IPC
Extn: 208 2444117
www.ipc-kw.com

தேய்ந்து கொண்டிருக்கும்
வாழ்க்கையில்
உங்கள் இலட்சியங்களை
உயர்வாக்கிக் கொள்ளுங்கள்!

உயர்ந்த இலட்சியங்களுக்கு...





IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

Extn: 208 2444117

رحمة للعالمين...

www.ipc-kw.com